1993 ஏப்ரல் 19]

2. மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களைப் பதவியிலிருந்து நீக்கக் கோரும் தீர்மானம்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : இப்போது பேரவை முன்னுள்ள அலுவல், மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களைப் பதவியிலிருந்து நீக்கக் கோரும் தீர்மானமாகும். இத்தீர்மானத்தை முன்மொழியப் பேரவை அனுமதி அளிக்கிறதா என்பதை அறிவதற்கு முன்பு தீர்மானத்தை இப்பேரவைக்கு நான் படிக்கவேண்டும். தீர்மானம் கீழ்க்கண்டவாறு உள்ளது :

"That this House resolves to remove Hon,ble Thiru Sedapatti R. Muthiah from the Office of the Speaker.

தீர்மானத்திற்கான அறிவிப்பைக் கொடுத்திருப்பவர்கள் :

திருவாளர்கள் :

எஸ். ஆர். பாலசுப்ரமணியன், எதிர்க்கட்சித் தலைவர்.

எஸ். டேனியல் ராஜ்

ச. அழகிரி

இரா. அப்பு நடேசன்

எ. சம்பத்

ஆ. பாலையா

சோ. இராசாராமன்

க. வெ. வீ. இராசமாணிக்கம்

ஆர். சிங்காரம்

பி. ஆர். எஸ். வெங்கடேசன்

சோ. காளன்

திருவாளர்கள் :

பெ. பொன்னுசாமி

வி. தண்டாயுதபாணி

உ. பலராமன்

எஸ். எம். கிருஷ்ணன்

பெ. அபரஞ்சி

கோ. ஜானகிராமன்

எம். சுந்தரசாமி

திருமதி ரமணி நல்லதம்பி

திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள்

திருமதி ஜே. லோகாம்பாள்

எஸ். பீட்டர் அல்போன்ஸ்

ஏ. சுதர்சனம்

ச. புரட்சிமணி

எ. தெய்வநாயகம்

குமரி அனந்தன்

பி. வி. இராஜேந்திரன்

இரா. பழனிசாமி

சி. சுவாமிநாதன்

கே. கந்தசாமி

சோ. பாலகிருஷ்ணன்

1993 ஏப்ரல் 19] [பேரவைத் துணைத் தலைவர்]

திருவாளர்கள் :

கே. செல்வராஜ்

ஆர். தங்கராசு

சா. பன்னீர்செல்வம்

எச். எம். ராஜு

கே. ஆர். இராமசாமி அம்பலம் ஆகியோர்.

பேரவை விதி 70 (1) இன்படி இத்தீர்மானத்தை முன் மொழிய பேரவை அனுமதி அளிக்கவேண்டும். எனவே பேரவை அனுமதி அளிக்கிறதா என்பதை அறிய இத்தீர்மானத்திற்கு இசைவளிக்கும் மாண்புமிகு உறுப்பினர்கள் தங்கள் இருக்கைகளில் எழுந்து நிற்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

(35-க்கு மேற்பட்ட உறுப்பினர்கள் எழுந்து நின்றனர்.)

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : 35-க்கும் அதிகமான மாணபுமிகு உறுப்பினர்கள் இசைவளித்து ஆதரவாக எழுந்து நிற்பதால் பேரவை தீர்மானத்தை எடுத்துக்கொள்ள அனுமதி அளிக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இத்தீர்மானத்தை விவாதத்திற்கு எடுத்துக்கொள்வதற்கு பேரவையின் அனுமதி அளிக்கப்பட்டிருப்பதால் பேரவை விதி 70 (2)ன் படி தீர்மானத்தின் மீதான விவாதம் உடனடியாகவே நடைபெறலாம் என்று கருதுகிறேன். (குறுக்கீடு)

திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ் : பாயின்ட் ஆப் ஆர்டர்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : இப்போது பாயின்ட் ஆப் ஆர்டர் இல்லை. (குறுக்கீடு) நான் இதைப் படித்து முடித்தவுடன் நீங்கள் சொல்லலாம். (குறுக்கீடுகள்) மாண்புமிகு உறுப்பினர்கள் அமைதி காக்க வேண்டும். நான் இதை அவைக்குத் தெரிவித்தவுடன் இதில் பாயின்ட் ஆப் ஆர்டர் இருந்தால் (குறுக்கீடுகள்) நீங்கள் எழுந்து சொல்லலாம். (குறுக்கீடுகள்)

முற்பகல் 11-10

பேரவைத் துணைத் தலைவர் எழுந்து நிற்கும்போது எல்லா உறுப்பினர்களும் தயவுசெய்து அமர வேண்டும். பேரவை விதி 70(2)இன் படி இத்தீர்மானம் மீதான விவாதத்தை உடனடியாக நடத்தலாம் என்று கருதுகிறேன். மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள், இத்தீர்மானம் முன்மொழிய பேரவை அனுமதி

[பேரவைத் துணைத் தலைவர்] [1993 ஏப்ரல் 19

யளிக்கும் பட்சத்தில் இன்றே உடனடியாக விவாதம் நடத்தி ஒரு முடிவுக்கு வருவது சரியாக அமையும் என்றும், பிறிதொரு நாளில் விவாதத்திற்கு எடுத்துக்கொள்ளும் வரையில், தான் பேரவைக்குத் தலைமையேற்று நடத்துவது சரியாக அமையாது என்றும் கருதுவதால் இந்தத் தீர்மானம் உடனடியாக விவாதத்திற்கு எடுத்துக் கொள்ளப்படுகிறது என்று இந்தப் பேரவையில் அறிவிக்கிறேன். இதற்கு இரண்டு மணி நேரம் ஒதுக்கப்படுகிறது. மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் தீர்மானத்தை முன்மொழியலாம்.

திரு. ப. ரங்கநாதன் : பாயின்ட் ஆப் ஆர்டர். . . . . (குறுக்கீடுகள்)

திரு. எஸ். ஆர். பாலசுப்ரமணியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, டெபுட்டி ஸ்பீக்கர் என்பவர் ஸ்பீக்கரின் டெபுட்டி. ஸ்பீக்கர் பதவியிலிருந்து அப்பாற்பட்ட வராகவோ அல்லது சார்பற்றவராகவோ இயங்க முடியாது. சபாநாயகருக்கு எதிரான தீர்மானம் விவாதிக்கப்படுகிற நேரத்தில். . . .

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : மாண்புமிகு, எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் தீர்மானத்தை முன்மொழியலாம் என்று சொல்லி இருக்கிறேன்.

Thiru S. R. Balasubramoniyan : Hon. Deputy Speaker Sir, I move the following resolution namely — 'That this House resolves to remove Hon'ble Thiru Sedapatti R. Muthiah from the Office of the Speaker."

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : பேரவை விதி 97 (2) இன்படி இத்தீர்மானம் வழிமொழியப்படாததால் கைவிடப்படுகிறது என்பதை அறிவிக்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி).

திரு. எஸ். ஆர். பாலசுப்ரமணியன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, வழிமொழியப்பட வேண்டுமென்று சொன்னால் வழிமொழிவதற்கு நீங்கள் சந்தர்ப்பம் அளித்து இருக்க வேண்டும். இப்போதும் ஒன்றும் காலதாமதம் ஆகிவிட்டில்லை.

திரு. கா. ப. பட்டாபிராமன் : பாயின்ட் ஆப் ஆர்டர். . . . (குறுக்கீடு).

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : பாயின்ட் ஆப் ஆர்டர், திரு. கா. ப. பட்டாபிராமன். . . .

1993 ஏப்ரல் 19]

திரு. கா. ப. பட்டாபிராமன் : பாயின்ட் ஆப் ஆர்டர். பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்தத் தீர்மானத்தை முன்மொழிந்தவுடன், இந்தத் தீர்மானம் உடனடியாக யாராகிலும் ஒருவரால் இந்தத் தீர்மானத்தை எழுப்புகிற அந்தப் பக்கத்திலிருந்து வழிமொழியப்படவேண்டும். (குறுக்கீடுகள்) மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, நான் சட்டத்தைப் படித்துக் கொண்டிருக்கிறேன். (குறுக்கீடுகள்) நான் ஒரு பாயின்ட் ஆப் ஆர்டரில் நிற்கிறேன். (குறுக்கீடுகள்) நான் சட்டத்தைப் படித்துக் கொண்டு நிற்கிறேன். (குறுக்கீடுகள்)

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : அவர் பாயின்ட் ஆப் ஆர்டரில் பேசுகிறார், அவர் முடிக்கட்டும்.

திரு. கா. ப. பட்டாபிராமன் : சட்டத்திற்கு மதிப்பு அளிப்பதாகச் சொல்கிற எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் நான் இந்த அவையில் பேசுவதைக்கேட்க வேண்டும். நான் சட்டத்தின்படி நிற்கிறேன். சட்டத்தினுடைய வழிமுறைகளைப் பற்றிப் பேசிக் கொண்டிருக்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) சட்டத்தைப் பற்றி சட்டமன்றத்திலே அதிகமாகப் பேசுகிற எதிர்க்கட்சி உறுப்பினர்கள் அத்தனை பேரும் இந்த விதிமுறைகளைப் பின்பற்ற வேண்டும் என்பதைத்தான் இங்கே எடுத்துச்சொல்லிக் கொண்டிருக்கிறேன். உடனடியாக அது வழிமொழியப்படவில்லை என்றால் அந்தத் தீர்மானம் 'It must be dropped forthwith' (மேசையைத் தட்டும் ஒலி) என்று விதி 97 (2)-ல் இருக்கிறது. நீங்கள், எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் இந்தத் தீர்மானம் முன்மொழிந்தவுடன் சிறிது நேரம் கூட காலதாமதம் செய்தீர்கள். நானும் அதைப் பார்த்துக் கொண்டிருந்தேன். (குறுக்கீடுகள்) ஆகவே, இந்தத் தீர்மானம் கைவிடப்பட்டது சட்டத்தின்படி, விதிகளின்படி சரியானது என்று சொல்கிறேன். (குறுக்கீடுகள்)

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர்.

Thiru S. R. Balasubramoniyan: If you are so strict, you should have given an opportunity to our Members to second the resolution.

Hon. Deputy Speaker : Ample opportunity was given.

திரு. கா. ப. பட்டாபிராமன் : Hon. Deputy Speaker Sir, I am on a point of order. (Interruptions) I am on a point of order. (குறுக்கீடுகள்).

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : நான் சொல்கிறேன். பேரவை விதி எண் 97 (2) இல் "A motion not seconded is forthwith dropped" என்று இருக்கிறது (குறுக்கீடுகள்) பேரவையில் ஒரு தீர்மானம் முன்மொழியப்பட்டவுடன், உடனடியாக வழிமொழியப்படவேண்டும் என்று இருக்கிறது. வழிமொழிவதற்கு வாய்ப்பு அளிக்கப்பட்டுத்தான் பேரவையில் சிறிது நேரம் நான் அனுமதி அளித்தேன். இந்தத் தீர்மானத்தைக் கொடுத்திருக்கிற உறுப்பினர்கள் எவரும் அதைப் பயன்படுத்திக் கொள்ள முன்வரவில்லை. ஆகவேதான், பேரவை விதி 97 (2)இன் படி, இது கைவிடப்படுகிறது என்று நான் இங்கே தீர்ப்பளித்து இருக்கிறேன். (குறுக்கீடுகள்) திரு. பண்ருட்டி இராமச்சந்திரன்.

திரு. ச. இராமச்சந்திரன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தாங்கள் அளித்த தீர்ப்பு பொதுவான தீர்மானங்களை ஒட்டியது. பேரவைத் தலைவரை நீக்கவேண்டும் என்று கோருகிற தீர்மானம் எவ்வாறு செயல்படுத்தப்பட வேண்டும் என்பதற்கான விளக்க விதிகள் 68, 69, 70, 71—விளக்க விதிகளில் முறைகளை வகுத்து விட்ட பிறகு, அந்த முறைகளின் படிதான் இந்தத் தீர்மானம் விவாதத்திற்கு எடுத்துக் கொள்ளப்படவேண்டுமே தவிர, பொதுவான தீர்மானங்களுக்கு இருக்கக் கூடிய முன்மொழிதல், வழிமொழிதல் என்ற டெக்னிகாலிட்டியைக் கொண்டுவந்து, சிறப்பாக பேரவைத் தலைவர் மீது கொண்டு வந்திருக்கிற நம்பிக்கையில்லாத் தீர்மானத்தைத் தள்ளுபடி செய்வது முறையல்ல என்பதைக் குறிப்பிட விரும்புகிறேன். (குறுக்கீடுகள்).

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : மாண்புமிகு உறுப்பினர் இராமச்சந்திரன் அவர்கள் இங்கே ஒரு கருத்தைத் தெரிவித்து இருக்கிறார்கள். அவர்கள் இந்த அவையிலே பல ஆண்டுகள் உறுப்பினராக இருந்தவர்கள். இதற்கு முன்னாலே இந்த அவையிலே பலமுறை இப்படிப்பட்ட தீர்மானங்கள் எடுத்துக்கொள்ளப்பட்டு இருக்கின்றன. அந்தத் தீர்மானங்கள் அனைத்தும் முறைப்படி வழிமொழியப்பட்டு இருக்கின்றன என்பதையும் நான் தெளிவுபடுத்த விரும்புகிறேன் (குறுக்கீடுகள்).

Thiru C. P. Pattabiraman : I am on a point of order.

திருமதி ரமணி நல்லதம்பி : எங்களுக்குப் பாயின்ட் ஆப் ஆர்டர் கொடுங்கள். (குறுக்கீடு).

Thiru S. Peter Alphonse : On a point of order, Sir.

1993 ஏப்ரல் 19]

திரு. எஸ். திருநாவுக்கரசு : பாயின்ட் ஆப் ஆர்டர். (குறுக்கீடுகள்).

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : பாயின்ட் ஆப் ஆர்டர், திரு. திருநாவுக்கரசு.

திரு. எஸ். திருநாவுக்கரசு : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, விதிகளிலே தெளிவாக இருக்கிறது. 70(1) ன் படி. நிர்ணயிக்கப்பட்ட நாளன்று, பேரவைக் கூட்டத்திற்குத் தலைமை வகிப்பவர் அத்தனித் தீர்மானத்தைப் படித்துக் காட்டி அதைக் கொண்டு வர இசைவளிக்கும் உறுப்பினர்களை அவரவர் இடங்களில் எழுந்து நிற்குமாறு கேட்டுக் கொள்ளவேண்டும். 35-க்குக் குறையாத உறுப்பினர்கள் எழுந்து நின்று, இசைவு அளிப்பின், பேரவை கூட்டத்திற்குத் தலைமை வகிப்பவர், பேரவையின் அனுமதி கிடைத்துள்ளது என அறிவிக்க வேண்டும். பேரவையின் அனுமதி கிடைத்துள்ளது என்றால், அதற்குப் பிறகு டிஸ்கஷன்தான். அவர்கள் மூவ் பண்ணினவுடனே, டிஸ்கஷன்தான். விதிகள் 70, 71லே அந்த மாதிரி ரூல்ஸ் கிடையாது. (குறுக்கீடுகள்).

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : பேரவையின் அனுமதி முன்மொழிவதற்காகத் தரப்பட்டு இருக்கிறது. முன்மொழிந்த பிறகுதான், விவாதம் என்ற பேச்சே வருகிறது. (குறுக்கீடுகள்). இதற்கு முன்மாதிரி இருக்கிறது. இதற்கு முன்பு நடந்து இந்த அவையிலே பதிவு செய்யப்பட்டவற்றை எல்லாம் மாண்புமிகு உறுப்பினர்கள் படித்துப் பார்க்கவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். (குறுக்கீடுகள்).

Thiru S. Peter Alphonse : On a point of order, Sir.

திரு. ச. இராமச்சந்திரன் : விதி 70-லே, 35 உறுப்பினர்கள் எழுந்து நின்று பிறகு அதற்கு அனுமதி கொடுத்தவுடன், பேரவையினுடைய சொத்தாக அந்தத் தீர்மானம் ஆகிவிடுகிறது. It becomes the property of the House.

Hon. Deputy Speaker : Only when it is moved.

திரு. ச. இராமச்சந்திரன் : ஆகையினாலே, (குறுக்கீடுகள்) முடிக்கிறேன் சார். எப்போது, அந்தத் தீர்மானம் நிறைவேற்றப் படவேண்டும் என்று வருகிறபோதுதான், முன்மொழிதல், வழி மொழிதல், டிஸ்கஷனுக்கு—It is the property of the House. You can discuss. (குறுக்கீடுகள்).

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : மாண்புமிகு உறுப்பினர் விதிமுறைகளைச் சரியாகப் பார்க்கவேண்டும்.

மூன்மொழியப்பெற்ற பிறகுதான் விவாதம் நடைபெற வேண்டும் (குறுக்கீடுகள்) எதிர்க்கட்சித் தலைவர்.

முற்பகல் 11-20

Thiru S. R. Balasubramoniyan : Rule 70, clause (2) says, " If leave of the House is granted discussion on the resolution may follow immediately"—there is no question of proposing the resolution or seconding the resolution-- "or the House may fix for its discussion a date not being more than seven days from the day on which leave is granted." This is a special resolution. We have complied with the rules and we have given fourteen days' notice. Today, you wanted to know whether the House is going to give leave for the Motion. The House has granted leave for the Motion. Immediately, the discussion should have followed; or, you should have fixed some other day. You cannot ask us to move the resolution and then say that there is no seconder. There are a number of seconders. It is not proper on your part to say that there is no seconder and so it is forthwith dropped. You have unnecessarily .....

Hon. Deputy Speaker : But the question is they have not seconded.

Thiru. S. R. Balasubramoniyan: Last time, it was not the Deputy Speaker who presided. The senior most Member, Tmt. Jothi Venkatachellum presided. Because the Deputy Speaker always functions in unison with the Speaker and not independently, he should not have presided over the House . He should have allowed some other senior Member—any respected, senior Member to preside.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : துணைத் தலைவர் இல்லை என்றால்தான் அந்தக் கேள்வி வருகிறது. (குறுக்கீடு) அப்போது துணைத் தலைவர் இல்லை என்பதால்தான் அந்தக் கேள்வி எழுந்தது. துணைத் தலைவர் இருக்கும்போது இல்லை. (குறுக்கீடு) திரு. ரங்கராஜன், பாயின்ட் ஆப் ஆர்டர்.

Thiru. S. R. Balasubramoniyan : Thiru Seenivasan was very much there.

Thiru. T. M. Rangarajan : I am on a point of order. Sir, I am on a point of order.

Hon. Deputy Speaker : Thiru. T. M. Rangarajan.

1993 ஏப்ரல் 19]

Thiru. T. M. Rangarajan : Rule 70 is for the admissibility of the Motion that the Resolution be taken by the House, where as rule 97 says that a motion not seconded is forthwith dropped. Here, the term 'motion' covers every motion which includes the motion for removal of the Speaker also. So, only rule 97 will have to be followed. The Opposition leader is disputing the ruling of the Chair. Action should be taken against the opposition leader. He cannot be like this.

Hon. Deputy Speaker : Constitution of India, Article 181, "The Speaker or the Deputy Speaker not to preside while a resolution for his removal from office is under consideration—(1).....

Thiru. S. Peter Alphonse : Sir, I have been asking for a point of order.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : உங்களுக்கும் வாய்ப்புத் தரப்படும். எதிர்க்கட்சித் தலைவர் பாயின்ட் ஆப் ஆர்டர் கேட்டார், அவருக்குத் தரப்பட்டது. அதற்கு அடுத்து திரு. ரங்கராஜன் அவர்களுக்குத் தரப்பட்டது. (குறுக்கீடுகள்) பேரவைத் துணைத் தலைவரைக் கொஞ்சம் பேச விடுங்கள்.

Thiru. S. R. Balasubramoniyan : You are misquoting. You have no business you are misleading the House.

Hon. Deputy Speaker : பேரவைத் துணைத் தலைவரைப் பார்த்து 'You have no business.' என்று சொல்வது முறையா ?

திரு. ஓ. எஸ். அமர்நாத் : அவர் எவ்வாறு அப்படிச் சொல்லலாம்.

Hon. Deputy Speaker : Article 181 (1) of the Constitution says—"At any sitting of the Legislative Assembly, while any resolution for the removal of the speaker from his office is under consideration, the Speaker or while any resolution for the removal of the Deputy Speaker from his office is under consideration, the Deputy Speaker, shall not, though he is present, preside, and the provisions of clause (2) of Article 180 shall apply in relation to every such sitting as they apply in relation to a sitting from which the Speaker or, as the case may be, the Deputy Speaker, is absent." என்று மிகத் தெளிவாக இருக்கிறது. பேரவையின் துணைத்தலைவர் இல்லை என்றால்தான், அப்படிப் பட்ட நேரங்களில் பேரவையில் அனுமதிக்கப்பட்ட பட்டியலிலே இருக்கும் மாற்றுத் தலைவர்களிலே ஒருவர் அல்லது தேர்ந்து எடுக்கப்பட்ட ஒருவர் தலைமை ஏற்றதாக முன்னுதாரணம் இந்த அவையிலே இருக்கிறது என்பதை மாண்புமிகு எதிர்க் கட்சித் தலைவர் அவர்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன். **பாயின்ட் ஆப் ஆர்டர் திரு. குமரி அனந்தன்.**

திரு. குமரி அனந்தன் : பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, "More than three centuries ago, Parliament agreed to the rule that , if two Members stand to speak on a Bill, he who is against the Bill should be first called". அவர் எழுந்து முதலிலே "எகன்ஸ்ட்" என்று சொன்னால் (குறுக்கீடு) அங்கே இருக்கின்றவர்களுக்கு எகன்ஸ்டாக இருக்கின்றவர்கள்தான்...

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : அது பில்லிலே.

திரு. குமரி அனந்தன் : துணைத் தலைவர் அவர்களே, இல்லை. பில் அல்ல. (கூச்சல்--குழப்பம்) இது ரெஸல்யூஷனாக இருக்கலாம். எதுவாகவும் இருக்கலாம். அவருக்கு நீங்கள் கொடுக்க வில்லை. (கூச்சல்-குழப்பம்) அவருக்கு நீங்கள் அதைக் கொடுக்க வேண்டும். (கூச்சல்--குழப்பம்). எதிர்க்கட்சிக்கு நீங்கள் அதை முதலிலே கொடுத்திருக்க வேண்டும். அப்போது கொடுத்திருந்தால்—அவர் நீங்கள் அதைச் சொல்வதற்கு முன்னாலேயே எழுந்து விட்டார். அவர் எழுந்ததற்குப் பிறகு நீங்கள் யார் யாருக்கோ கொடுத்திருக்கிறீர்கள் என்பது உங்களுக்குத் தெரியும். மாண்புமிகு துணை சபாநாயகர் அவர்களே, முதலிலே எழுந்தது எங்கள் பீட்டர் அல்போன்ஸ். அதன் பிறகு எவ்வளவோ நேரத்திற்குப் பிறகு எழுந்தவர் மரியாதைக்குரிய மாண்புமிகு ரங்கராஜன் அவர்கள். அவர்களுக்குக் கொடுத்தீர்கள். இதுவே முறையல்ல என்பதை நாங்கள் சொல்லிக்கொள்கின்றோம் (கூச்சல்-குழப்பம்).

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : மாண்புமிகு உறுப்பினர் பீட்டர் அல்போன்ஸ் முதலிலே கேட்டார். அவர் எழுந்து கேட்ட நேரத்திலேயே மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்களும் எழுந்து நின்று கொண்டார். ஆகவே எதிர்க்கட்சித் தலைவருக்கு எப்போதும் தரப்படுகிற முன்னுரிமை தரப்பட்டது. இதிலே மாண்புமிகு காங்கிரஸ் கட்சி உறுப்பினர்களுக்கு என்ன ஆட்சேபணை என்று எனக்குத் தெரியவில்லை. (கூச்சல்-குழப்பம்)

திரு. குமரி அனந்தன் : ஆன் எ பாயின்ட் ஆப் ஆர்டர். ஒழுங்குப் பிரச்சினை என்பது.. (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : திரு. குமரி அனந்தன் அவர்கள்–ஒரு நிமிடம். மாண்புமிகு குமரி அனந்தன் பாயின்ட் ஆப் ஆர்டர் என்று சொல்லி இங்கே பேசிக்கொண்

1993 ஏப்ரல் 19]

[பேரவைத் துணைத் தலைவர்]

டிருக்கிறார். அந்த நேரத்திலேயே மற்றொரு காங்கிரஸ் கட்சியின் உறுப்பினரான திரு. பீட்டர் அல்போன்ஸ் அவர்கள் எனக்கு அந்த வாய்ப்பைக் கொடுங்கள் என்று கேட்கிறார். இதற்கு எதிர்க்கட்சித் தலைவர் என்ன பதில் சொல்கிறார்? (கூச்சல்-குழப்பம்)

திரு. எஸ்.ஆர். பாலசுப்ரமணியன் : துணைத் தலைவர் அவர்களே, பீட்டர் அல்போன்ஸ் அவர்கள் முதலிலே எழுந்து நின்றார்கள். அவர்களை இப்போது அனுமதியுங்கள்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : திரு. பீட்டர் அல்போன்ஸ்.

திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ் : பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, விதி 97(1) சொல்கிறது—

"Every motion must be proposed by one Member and seconded by another though the seconder of a substantive motion may reserve his right of speech till a later stage of the debate."

"If the motion is not seconded, it has to be forthwith dropped."

பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்த மன்றத்திலே நீங்கள் விதிகளைக் கடைப்பிடித்து வருகிறீர்கள். ஒரு தீர்மானத்தை யாராவது முன்மொழிய வேண்டும் என்று சொன்னால் நீங்கள் என்ன சொல்கிறீர்கள்? தீர்மானத்தை இவர் முன்மொழிவார் என்று சொல்கிறீர்கள். அவர்கள் எழுந்து முன்மொழிகிறார்கள். வெட்டுத் தீர்மானம் கொடுத்திருந்தால் கூட யாரெல்லாம் வெட்டுத் தீர்மானம் கொடுத்திருக்கிறார்களோ அவர்களை வலியுறுத்துகிறீர்களா என்று ஒவ்வொரு முறையும் கேட்கிறீர்கள். ஒரு சட்டமுன் வடிவு நிறைவேறும்போதுகூட ஏற்போர் - ஆம் என்க, மறுப்போர் இல்லை என்க என்று இரண்டு பக்கமும் அழைப்பு விடுக்கின்றீர்கள். எனவே நீங்கள் முறையாக என்ன செய்திருக்க வேண்டும் என்று சொன்னால் இந்தத் தீர்மானத்தை யார் வலியுறுத்துகிறீர்கள் என்ற ஒரு கேள்வியை இந்த அவையிலே வைக்க வேண்டும். அதற்கு ஒரு சந்தர்ப்பம் கொடுக்க வேண்டும். (கூச்சல்-குழப்பம்).

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : நான் இதற்குப் பதில் சொல்லிவிடுகிறேன். அதற்குப் பின்னாலே மாண்புமிகு உறுப்பினர் பேசலாம்.

[1993 ஏப்ரல் 19

திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ் : நான் இன்னும் முடிக்க வில்லை.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : நீங்கள் பேரவைத் துணைத் தலைவரைப் பார்த்து குற்றச்சாட்டாக ஒன்றைச் சொல்லும்போது அதற்குப் பதில் சொல்வதற்குப் பேரவைத் துணைத் தலைவருக்கு எல்லா உரிமையும் இருக்கிறது.

திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ் : துணைத் தலைவர் அவர்களே, தீர்மானத்தை முன்மொழிய மாண்புமிகு எதிர்க் கட்சித் தலைவரை அழைத்து இருக்கிறீர்கள். அவர்கள் தீர்மானத்தை முன்மொழிய நீங்கள் பெயர் சொல்லி அழைத்த பிறகு, அவர்கள் எழுந்து முன்மொழிந்திருக் கிறார்கள். அதைப்போல நீங்கள் அடுத்து என்ன கேட்டிருக்க வேண்டும் ? இந்தத் தீர்மானத்தை யாராவது வழிமொழி கிறீர்களா என்று நீங்கள் கேட்டிருக்க வேண்டும். (கூச்சல்-குழப்பம்)

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : அப்படி விதிகளிலே இடம் இல்லை. அது உங்களுடைய பொறுப்பு. பொறுப்புணர்வுள்ள, கடமை உணர்வுள்ள உறுப்பினர்கள் அதைச் செய்திருக்க வேண்டும். அதைச் செய்யவில்லை. (கூச்சல்-குழப்பம்) மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர்.

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன் : பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் பீட்டர் அல்போன்ஸ் அவர்கள் விதி 97-ஐப் படித்துக் காண்பித்தார்கள். அதிலே தெளிவாக இருக்கிறது. "A motion not seconded is forthwith dropped." துணைத் தலைவர் அவர்களே, ஏற்கனவே (கூச்சல்-குழப்பம்) ஒரு தீர்மானத்தை முன்மொழிகின்றபோது அதிலே தெளிவாக செகண்ட் பண்ண வேண்டும் என்று சொல்லப்படவில்லை. ஆகவே துணைத் தலைவர் அவர்களே, அதை யார் மறுபடியும் ஏற்றுக்கொள்கிறார் என்று சொல்ல வேண்டிய அவசியம் இதிலே கிடையாது. ஒரு தீர்மானம் முன்மொழியப்படுகின்ற போது தாங்களாகவே எழுந்து அந்தப் பகுதியிலே இருப் பவர்கள் அதை செகண்ட் செய்திருக்க வேண்டும். (கூச்சல்-குழப்பம்) It is your duty. That duty devolves upon you (மேசையைத் தட்டும் ஒலி) அந்தக் கடமையை நீங்கள் நிறைவேற்றியிருக்க வேண்டும். ஒரு கடமையிலிருந்து தவறிய தற்கு நீங்கள் காரணம் கற்பிக்கக் கூடாது என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

1993 ஏப்ரல் 19]

திரு. துரை ராமசாமி : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர்கள் திரு. பண்ருட்டி இராமச்சந்திரன் அவர்கள், திரு. திருநாவுக்கரசு அவர்கள், எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் எல்லோரும் முதலில் வழிமொழியத் தேவையில்லை என்ற கருத்தைச் சொன்னார்கள். ஆனால் காங்கிரஸ் கட்சியைச் சார்ந்த மாண்புமிகு உறுப்பினர் திரு. பீட்டர் அல்போன்ஸ் அவர்கள் சொல்லும்போது அவர்கள் வழிமொழிய நீங்கள் அழைத்து இருக்க வேண்டும் என்ற கருத்தைச் சொல்லியிருக்கிறார்கள். ஆகவே, வழிமொழிய வேண்டும் என்பதை அவர்களே ஏற்றுக் கொண்டார்கள் என்பதை நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

முற்பகல் 11-30

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : திரு. பண்ருட்டி இராமச்சந்திரன்.

திரு. ச. இராமச்சந்திரன் : On a point of order, Sir விதி 68, பொதுவான நடைமுறை செயல்டாடுகளைப் பற்றி எழுதப்பட்ட விதி. அதைப் பயன்படுத்து கிறபோது ஒரு தீர்மானத்தைத் தருபவர் ஒரு தீர்மானத்தைத் தருகிறார். அதற்கு வழிமொழிந்தால் தான் அந்தத் தீர்மானம் எடுத்துக் கொள்ளப்படுகிறது. ஏன் என்றால் குறைந்தது இருவராவது இருக்கவேண்டும் என்ற அடிப்படையில். பேரவைத் தலைவரை நீக்கக் கோரும் தீர்மானத்தைப் பற்றி தனியாக ஒரு சேப்டர் ; ஒரு புரசிஜர் என்ன என்று வகுக்கப் பட்டிருக்கிறது. பேரவைத் தலைவரை நீக்கக் கோருகிற தீர் மானம் என்று சொல்லுகிறபோது விதி 68-ஐப் பயன்படுத்தி 2 உறுப்பினர்கள் கொடுத்து விட முடியாது. அதே உணர் வினை அந்தச் சேப்டரில் பேரவைத் தலைவரை நீக்க வேண்டும் என்ற அந்தத் தீர்மானத்தில் 35 பேர்களும் அந்த உணர்வினை இங்கே கொண்டு வந்து விட்டார்கள். அதனால்தான் அந்தத் தனிச் சேப்டரைப் பார்ப்பீர்களானால் அதிலே பேரவை அனுமதி கொடுப்பதற்கே 35 பேர் வேண்டும். மற்ற தீர்மானத்திற்கு ஒருவர் இன்னொருவர் வழிமொழிய ஆக இருவர் போதும். அதோடு மட்டுமல்லாமல் பேரவை அனுமதி அளிக்க 35 பேர் வேண்டும். விதி 70 (2)-ன்படி பேரவை அனுமதி அளித்து விட்டால் விவாதம் உடனடியாக அனுமதிக்கப்படவேண்டும். இதுதான் தெளிவாக விதிகளிலே இருக்கிறது. ஆகவே, மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்த நம்பிக்கையில்லாத் தீர்மானத்தை உடனடியாக விவாதத்திற்கு எடுத்துக்கொள்ள அனுமதிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

[1993 ஏப்ரல் 19

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, திரு. பண்ருட்டி இராமச் சந்திரன் அவர்கள் ஒரு விதியைச் சொன்னார்கள். ஏற் கனவே இருக்கிற விதியோடு கூடி வருகிற அந்த விதி அந்த இரண்டையும் சேர்த்துத்தான் பார்க்கவேண்டுமே ஒழிய அந்த ஒரு விதியை மட்டும் பார்த்துக் கொண்டிருக்க முடியாது. எனவே, இரண்டு விதிகளையும் சேர்த்துப் பார்க்கவேண்டும். மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்கள் முறை யாக எல்லாவற்றையும் செய்து கொண்டு வந்து கடைசியாக அவர்களை முன்மொழியச் சொன்னார்கள். முன்மொழிந்து சொன்ன பிறகு வழிமொழிய அவர்கள் யாராவது இருக்கிறார் களா என்று அவர்கள் கால அவகாசம் கொடுத்தார்கள். (கூச்சல்-குழப்பம்) நான் பேசி முடித்துவிடுகிறேன். இங்கே எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் முன்மொழிந்த பின்னாலே மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்கள் கொஞ்சம் பொறுத்து இருந்து பார்த்துவிட்டு இதிலே உங்களுக்கே சந்தேகம் இருக்கிற காரணத்தால் அவர்கள் அதை விட்டுவிட்டார்கள். (கூச்சல்-குழப்பம்) அவ்வளவுதானே ஒழிய, உங்களுக்கே சந்தேகம் இருந்த காரணத்தால் நீங்கள் யாரும் வழிமொழியவில்லை. (கூச்சல்-குழப்பம்) எனவே, அவர்கள் விட்டு விட்டார்கள். இப்போது நீங்கள் இதிலே போய் மீண்டும் அதை எடுத்துக்கொள்ளவேண்டு மென்று பிரஸ் செய்வது அவ்வளவு சரியாக இல்லை.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : இந்த அவை முன் இப்போது இருக்கின்ற பிரச்சினை (குறுக்கீடுகள்) இது வழிமொழியப்பட வேண்டுமா அல்லது இல்லையா என்பது. (குறுக்கீடுகள்) துணைத் தலைவருக்கு தன்னுடைய கருத்தைச் சொல்வதற்கு உரிமை உண்டு. நான் சொன்னதற்குப் பின்னால் நீங்கள் வேண்டுமானால் பேசலாம். இங்கே ஏன் முன்மொழியச் சொன்னீர்கள் என்று கூடக் கேட்டார்கள். நான் தீர்மானத்தை முன்மொழியவில்லை, துணைத் தலைவர் என்ற பொறுப்பி லிருந்து, இப்படிப்பட்ட தீர்மானம் தரப்பட்டிருக்கிறது என்று அந்தத் தீர்மானத்தை மாண்புமிகு உறுப்பினர்களுக்குப் படித்துக் காட்டி, இதற்குப் பேரவை அனுமதி அளிக்கிறதா—இசைவு அளிக்கிறதா—என்பதை அறிவதற்காக 35 உறுப் பினர்கள் எழுந்து நிற்கவேண்டுமென்று கேட்டேன். அப்படியே எழுந்து நின்று இருக்கிறார்கள். 68, 69 ஆகிய இரண்டு விதி களும் முறையாக இந்த அவையில் பின்பற்றப்பட்டு இருக் கின்றன.

அடுத்து, தீர்மானத்தை முன்மொழிந்துதான் இதற்கு முன்னால் இந்தப் பேரவையின் நிகழ்வுகள் நடந்து

1993 ஏப்ரல் 19] [பேரவைத் துணைத் தலைவர்]

இருக்கின்றன. அந்த நேரத்தில் எல்லாம் வழிமொழியப்பட்டிருக் கிறது. (குறுக்கீடுகள்) வழிமொழியச் சொல்லவேண்டும் என்று விதிமுறைகளிலே இல்லை. நான் இங்கே விதியைத் தெளிவாகப் படிக்க விரும்புகிறேன். மாண்புமிகு உறுப்பினர்கள் தயவு செய்து இதைக் கவனிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

Rule 97 (1) says "Every motion must be proposed by one Member and seconded by another...." என்று இருக்கிறது. (குறுக்கீடுகள்) ஒவ்வொரு தீர்மானமும் என்று இருக்கிறது.

"97 (1) Every motion must be proposed by one Member and seconded by another though seconder of a substantive motion may reserve his right of speech till a later stage of the debate ".

அதிலே "(2) A motion not seconded is forthwith dropped" என்று தெளிவாக இருக்கிறது. அடுத்து அதிலே ஒரு Proviso—

"Provided that a motion need not be seconded if the motion is one which is moved by a Minister or if the motion is one for the reduction of any Budget Grant" வெட்டுத் தீர்மானம் அல்லது ஒரு அமைச்சர் கொண்டு வருகிற தீர்மானம் இவற்றைத் தவிர மற்ற தீர்மானங்கள் அனைத்தும் முறையாக வழிமொழியப்பெற வேண்டும்; அப்படி வழிமொழியப் பெறாவிட்டால் உடனடியாக அது கைவிடப் படவேண்டுமென்று (மேசையைத் தட்டும் ஒலி) விதி 97-இல் மிகத் தெளிவாக இருக்கிறது. (குறுக்கீடு) நான் சொல்லி முடித்து விடுகிறேன். நான் முடித்த பின்பு உங்களுக்கு வாய்ப்பு இருக்கிறது. மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் பேசுவதற்கு வாய்ப்பு இருக்கிறது.

முற்பகல் 11-35

இங்கே முன்பு புலவர் கோவிந்தன் அவர்கள் மீது, அன்றைய பேரவைத் தலைவர் அவர்கள் மீது நம்பிக்கையில்லாத் தீர்மானம் கொண்டு வந்தபோது மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ். இராமச் சந்திரன் அவர்கள் இங்கே அமைச்சராக இருந்தார்கள். அன்று முன்மொழியப்பட்டு, முறையாக வழிமொழியப்பட்டதா இல்லையா என்பதை அவர்கள் சிந்தித்துப் பார்க்க வேண்டு மென்று நான் கேட்டுக் கொள்கிறேன். அதேபோல, அப்போது இந்த அவையிலே அமைச்சராக இருந்த மாண்புமிகு உறுப்பினர் பண்ருட்டி இராமச்சந்திரன் அவர்களுக்கு இந்த விதிமுறைகள் தெரியாது என்று நான் சொல்ல மாட்டேன். தெரிந்திருக்கிறது.

அவர்களும் அன்று இருந்து இருக்கிறார்கள். இதுவரை நடந்த அத்தனை நிகழ்வுகளிலும், அத்தனை விவாதங்களிலும் முறையாக முன்மொழியப்பட்டு, வழிமொழியப்பட்டு உறுப்பினர்கள் விவாதித்து இருக்கிறார்கள் என்பது அவைக் குறிப்பிலே இருக்கிறது. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு டாக்டர் ஜெ. ஜெயலலிதா : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, 1974ஆம் ஆண்டு மார்ச் 9ஆம் தேதி, இதே அவையிலே பேரவைத் துணைத் தலைவர் திரு. சீனிவாசன் அவர்களைப் பதவியிலிருந்து நீக்க வேண்டுமென்ற தீர்மானம் கொண்டுவரப்பட்டபோது, திரு. செ. கந்தப்பன் அவர்கள், "திரு. பெ. சீனிவாசன் அவர்களை பேரவைத் துணைத் தலைவர் பதவியிலிருந்து நீக்க இப்பேரவை தீர்மானிக்கிறது என்கிற தீர்மானத்தை நான் முன்மொழிகிறேன்" என்று முன்மொழிந்தார். அதனை அடுத்து உடனே திரு. மு. சுருளிவேல் என்ற சட்டமன்ற உறுப்பினர், "மாண்புமிகு உறுப்பினர் திரு. கந்தப்பன் அவர்கள் முன்மொழிந்த திரு. பெ. சீனிவாசன் அவர்களைப் பேரவைத் துணைத் தலைவர் பதவியிலிருந்து நீக்க இப்பேரவை தீர்மானிக்கிறது என்ற தீர்மானத்தை நான் வழிமொழிகிறேன்" என்று தெளிவாகக் கூறியிருக்கிறார். ஆகவே, இத்தகைய தீர்மானம் முன்மொழியப்பட்டால் உடனே வழிமொழியப்படவேண்டுமென்பது அவைக் குறிப்புகளிலேயே இருக்கிறது என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி.)

திரு. எஸ். ஆர். பாலசுப்ரமணியன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே.....

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்களுக்கு மற்றொரு முன் உதாரணத்தையும் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். (குறுக்கீடு) இந்த அவையிலே நடந்த முன் உதாரணத்தை எடுத்துச்சொல்லத் துணைத் தலைவருக்கு உரிமை இல்லையா ? இந்த அவையிலே நடந்த நிகழ்வை, இங்கே பதிவு செய்யப்பட்டிருப்பதை எடுத்துச் சொல்கின்ற உரிமை துணைத் தலைவருக்கு இருக்கிறது. பேரவைத் தலைவரைப் பதவி நீக்கம் செய்யக் கோரும் தீர்மானத்தை மரியாதைக்குரிய திரு. கே. டி. கே. தங்கமணி அவர்கள்

"Sir, I move" என்று தொடங்கி "that this House resolves to remove the Hon'ble Speaker from his Office for his various acts of commission and omission in respect of admitting privilege matters protecting the Ruling party at all costs in various matters, etc," என்று முன்மொழிந்தார். அதை டாக்டர் எச். வி. ஹண்டே அவர்கள், "Sir, I second it" என்று வழிமொழிகிறார். அன்றைக்கு

1993 ஏப்ரல் 19] [பேரவைத் துணைத் தலைவர்]

துணைத் தலைவர்தான் இந்த நிகழ்வுக்குத் தலைமை தாங்கி இருக்கிறார். (மேசையைத் தட்டும் ஒலி) பேரவைத் தலைவரைப் பதவி நீக்கம் செய்ய வேண்டும் என்ற தீர்மானம் மூன்மொழியப்பட்டு, அது வழிமொழியப்பட்டு, அவர்கள் பேசுகிறார்கள்.

"Mr. Deputy Speaker : The motion is taken up for consideration now." என்று சொல்கிறார். செகண்ட் செய்ததற்குப் பின்னால், அன்றைய துணைத் தலைவர், "The motion is taken up for consideration now" என்று சொல்கிறார். அதைத் தொடர்ந்து, மரியாதைக்குரிய திரு. கே.டி.கே. தங்கமணி அவர்கள், '' உதவி சபாநாயகர் அவர்களே '' என்று தொடங்கித்தான் பேசுகிறார். பேரவைத் துணைத் தலைவர்தான் அன்றைக்குத் தலைமை தாங்கி இருக்கிறார். (மேசையைத் தட்டும் ஒலி) தீர்மானம் மூறையாக மூன்மொழியப்பட்டு, செகண்ட் செய்யப்பட்டு இருக்கிறது. இதுதான் இந்த அவையின் நடைமுறை என்பதை மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்களுக்கு நான் தெரிவித்துக் கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி.)

திரு. எஸ். ஆர். பாலசுப்ரமணியன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, 1974ஆம் ஆண்டு பேரவைத் தலைவர் புலவர் கோவிந்தன் அவர்களைப் பதவியிலிருந்து நீக்கக் கோரும் தீர்மானம் மார்ச் 29ஆம் தேதி எடுத்துக்கொள்ளப் பட்டது. பேரவைத் தலைவர் அவர்களைப் பதவியிலிருந்து நீக்கக் கோரும் தீர்மானம், பக்கம் 28, மாண்புமிகு மாற்றுத் தலைவர் திருமதி ஜோதி வெங்கடாசலம், அடுத்து, பேரவைத் தலைவரைப் பதவியிலிருந்து நீக்கக் கோரும் தீர்மானம் முன்மொழியப்பட்டு விவாதிக்கப்பட வேண்டுமென்று அறிவிக்கிறார். அதோடு அவர் நிறுத்தவில்லை. 5 மாண்புமிகு உறுப்பினர்கள் தீர்மானத்தைக் கொடுத்திருக்கிறார்கள். அதில் ஒருவர் அதை முன்மொழிய வேண்டும். பின்னர் வழிமொழியப்பட வேண்டும். பின்னர் விவாதம் நடக்கும். வழிமொழியப்பட வேண்டுமென்று நீங்கள் சொல்லவே இல்லை. எனவே, அடிபட்டுப் போய்விடுகிறது. (கூச்சல்-குழப்பம்).

If you are impartial, you should have announced (Interruptions) You should have announced. You should say.

முற்பகல் 11-40

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவரவர்களுக்கு அது தெரிந்திருக்கும் என்று நான் நினைத்தேன். (கூச்சல்-குழப்பம்.)

Thiru S. R. Balasubramonian : You should have announced.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரவர்களே, ஒவ்வொரு முறையும் சட்டமன்றத்திலே தலைவரோ அல்லது துணைத் தலைவரோ ஒவ்வொரு விதிமுறையும் சொல்லிக் கொடுத்து நீங்கள் செய்வது இல்லை. எனவே, சில நேரங்களிலே சொல்லிக் கொடுப்பார்கள். இல்லையென்றால் நீங்களே செய்திருக்க வேண்டும். எனவே, உங்களுக்கு—பலபேருக்கு இது வேண்டாமென்று தோன்றிய காரணத்தால் நீங்கள் விட்டு விட்டீர்கள் என்றுதான் நாங்கள் கருதுகிறோம். (மேசையைத் தட்டும் ஒலி.)

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : திரு. ச. இராமச்சந்திரன்.

திரு. ச. இராமச்சந்திரன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தாங்கள் கூறிய முன்மாதிரிகள் ஏற்கெனவே நம்பிக்கையில்லாத் தீர்மானம் எடுத்துக் கொள்ளப்பட்ட முன்மாதிரிகள். நான் இங்கே எழுப்புகின்ற பிரச்சினை, நம்பிக்கையில்லாத் தீர்மானத்தை எடுத்துக் கொள்ளக் கூடாது என்பதற்காக விதி 97ஐப் பயன்படுத்தி, அதற்கென வகுக்கப்பட்டிருக்கிற ஸ்கீம்—அந்தத் திட்டத்தைச் சீர் குலைப்பது சரியா என்பதுதான் என்னுடைய பிரச்சினையே தவிர வேறல்ல. விவாதத்தைத் தொடங்கி, விவாதத்தின் இறுதியில்கூட தீர்மானத்தை நிறைவேற்றலாம் அல்லது நிராகரிக்கலாம். ஆகவே, தீர்மானம் என்பது ஒன்று, விவாதம் என்பது ஒன்று, தெளிவாக அந்த ஸ்கீமில்—பேரவைத் தலைவர் எப்படி நீக்கப்பட வேண்டும் என்கிற ஸ்கீமில் 35 பேர் எழுந்து நின்று அனுமதி கொடுத்தால் விவாதம் தொடங்கலாம் என்று இருக்கிறது. ஆகவே, பழைய முன்மாதிரிகளைக் காட்டி—அவைகள் எல்லாம் விவாதத்திற்கு எடுத்துக்கொள்ளப்பட்டவைகள். நீங்கள் விதி 97-ஐக் காட்டி விவாதத்தைத் தள்ளுகிறீர்கள். அது சரியல்ல என்றுதான் குறிப்பிடுகிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : மூன்று நிகழ்வுகளிலும் அது வழிமொழியப்பட்டுள்ளது என்பதை மாண்புமிகு உறுப்பினர் பண்ருட்டி இராமச்சந்திரன் அவர்கள் ஒத்துக் கொள்கிறாரா, இல்லையா என்பதை நான் தெரிந்து கொள்ள விரும்புகிறேன்.

Thiru S. R. Balasubramoniyan: There is a major difference (Interruption) You should have announced.

Hon. Deputy Speaker : Ignorance of Rules is not an excuse. அது தெரிந்திருக்க வேண்டும். எனக்குத் தெரியாது என்று சொல்வது ஏற்றுக்கொள்ளத் தக்கது அல்ல. Ignorance of rules is not an excuse. மாண்புமிகு முதலமைச்சரவர்கள்.

1993 ஏப்ரல் 19]

மாண்புமிகு டாக்டர் ஜெ. ஜெயலலிதா : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரவர்களே, மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவரவர்கள் சுட்டிக்காட்டிய சம்பவத்தின்போது, அதாவது 1974 மார்ச் 29ஆம் தேதி, திருமதி ஜோதி வெங்கடாசலம் அவர்கள் பேரவைத் தலைவராகச் செயல்பட்டபோதுகூட அவர்கள் எல்லா மாண்புமிகு உறுப்பினர்களையும் ஒத்துழைக்க வேண்டுமென்று கேட்டுக் கொண்டு, திரு. கோவை செழியன் அவர்கள் தீர்மானத்தை முன்மொழிய வேண்டும் என்று அழைக்கிறேன் என்றுதான் சொல்லியிருக்கின்றார்களே தவிர, வழிமொழிய வேண்டும் என்று அவர்கள் யாரையும் அழைக்கவில்லை. அத்தகைய ஒரு குறிப்பு அவைக்குறிப்பிலேயே இல்லை. அதன் பிறகு நேரடியாக அவர்களாகவே எழுந்து, வழிமொழிந்து இந்த விவாதம் நடைபெற்றிருக்கிறது என்பதை உங்களுக்குச் சுட்டிக்காட்ட விரும்புகின்றேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : மாண்புமிகு முதலமைச்சரவர்கள் எடுத்துத் தெரிவித்ததைப்போல, முன்மாதிரிகளில், இந்த அவையிலே இருக்கின்ற குறிப்புகளில்—பதிவு செய்யப்பட்ட கருத்துக்களில்—முன்பெல்லாம் முறைப்படி அது வழிமொழியப்பட்டிருக்கிறது என்பது நிரூபணம் ஆகிறது. ஒவ்வொரு முறையும் இது வழிமொழியப்பெற வேண்டும் என்று பேரவையில் அன்றைக்குத் தலைமை தாங்கியவர்கள் கேட்டுக் கொண்டதாக எல்லா இடங்களிலும் இல்லை. அதை ஒரு கட்டாயமாக நாம் இங்கே எடுத்துக்கொள்ள முடியாது.

அதைப்போலவே, திரு. பீட்டர் அல்போன்ஸ் அவர்கள் ''நீங்கள் ஆம் என்று சொல்லுங்கள், இல்லை என்று சொல்லுங்கள்'' என்று கேட்கிறீர்களே என்று கேட்டார்கள். அதற்கும் நான் விளக்கம் அளிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன். மாண்புமிகு பீட்டர் அல்போன்ஸ் அவர்கள் தெரிவித்த, ஒரு தீர்மானம் நிறைவேற்றப்படும்பொழுது பேரவைத் தலைவர் கேட்கின்ற கேள்வி, முன்மொழியப்படும் பொழுது அல்ல. விதிமுறைகளைச் சரியாகப் பார்க்க வேண்டுமென்று அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி.)

இங்கே பேசுகின்ற உறுப்பினர்களெல்லாம் தீர்மானத்தை நிராகரித்து விட்டோம் என்ற கருத்திலேயே பேசுகிறீர்கள். தயவு செய்து அதை மாற்றிக்கொள்ள வேண்டும். நிராகரிக்கப்படுவது என்பது வேறு ; கைவிடுவது என்பது வேறு. நிராகரிக்கப்படுகிறது என்று சொன்னால் இந்த அவை ஏற்றுக்கொள்ள வழியில்லை என்று நிராகரிப்பது. கைவிடுவது என்பது டெக்னிக்கல் ஃபிளா இருந்தால். நீங்கள் சரியாக அதைக் கொண்டுவரவில்லை என்பதால்—சரியாக அதைக் கொண்டுவரத் தவறி விட்டீர்கள் என்பதால் இந்தப் பேரவை கைவிடுகிறது என்று அறிவிப்பது.

[பேரவைத் துணைத் தலைவர்] [1993 ஏப்ரல் 19

இரண்டுக்கும் உள்ள வேறுபாட்டை மாண்புமிகு காங்கிரஸ் உறுப்பினர்கள் மற்றும் மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவரவர்கள் உணர்ந்து பார்க்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மூற்பகல் 11-45

திரு. ச. அழகிரி : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஒரு பாயின்ட் ஆப் ஆர்டர்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : இங்கே ஒழுங்குப் பிரச்சினை எழுப்புவதற்கு முன்பாக என்னுடைய கருத்தை உறுதியாக நான் சொல்லிக் கொள்கிறேன். மிகத் தெளிவாக விதியிலே இருக்கிறது. 'forthwith dropped' என்று இருக்கிறது. (குறுக்கீடு) வழிமொழியப்படாவிட்டால், உடனடியாக அப்போதே கைவிடப்பட வேண்டும் என்று இருக்கிறது. (கூச்சல்-குழப்பம்). திரு. ச. அழகிரி.

திரு. ச. அழகிரி : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, எதிர்க்கட்சித் தலைவர் அவர்களை முன்மொழிய நீங்கள் அழைத்தீர்கள் ; அவர் முன்மொழிந்தார். முன்மொழிந்தவுடனேயே விவாதத்தைத் தொடங்கினால்தான் வழிமொழியவில்லை என்ற பிரச்சினையே வரும். அவர் முன்மொழிந்தவுடன், நாங்கள் வழிமொழிவதற்கு எழுவதற்குள், நீங்கள் மிக அவசரமாக ஒரு தீர்மானத்தை.....(குறுக்கீடு).

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : மாண்புமிகு உறுப்பினர் திரு. அழகிரி அவர்கள் ஒன்றைப் புரிந்துகொள்ள வேண்டும். இந்த அவையிலே ஏறத்தாழ 235 ஜோடிக் கண்களும் உங்களைக் கவனித்துக் கொண்டுதான் இருந்தன. நீங்கள் எழுந்ததாக யாரும் இங்கே சொல்லவில்லை. நீங்கள் எழுந்திருந்தால் உடனடியாக பேரவைத் துணைத் தலைவர் அனுமதி கொடுத்திருப்பார்.....(குறுக்கீடு). மாண்புமிகு வீட்டுவசதித் துறை அமைச்சர்.

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே....(குறுக்கீடு).

Thiru S.R. Balasubramoniyan: Allow him to complete his point of order. (Interruptions) If you have determined, that is a different question. You should allow him to complete his point of order.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்களுக்கு ஒன்றைச் சொல்லிக்கொள்கிறேன். இவ்வளவு தூரம் நீங்கள் விவாதித்துக் கொண்டிருக்கிறபோதும், உங்களுக்கு வாய்ப்புத் தரப்பட்டுக் கொண்டுதான் இருக்கிறது என்பதை நீங்கள் மறந்துவிடக்கூடாது. இவ்வளவு விவாதம் இதிலே வருவதற்குக் காரணமே, நீங்கள் அதை முறைப்படி

[1993 ஏப்ரல் 19 [பேரவைத் துணைத் தலைவர்]

செய்யாமல் போனதுதான். இங்கே யாரும் வேண்டுமென்றே வலிந்து அந்தத் தீர்மானத்தை நிராகரிக்க வேண்டுமென்றோ, கைவிட வேண்டுமென்றோ திட்டமிட்டுச் செயல்படவில்லை.... (குறுக்கீடு).

Thiru S. R. Balasubramoniyan: That is my charge. You have purposely done it.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : வழி மொழியத் தவறி விட்டீர்கள் என்பதை நீங்கள் ஒப்புக்கொள்ள வேண்டும். சட்ட விதிமுறைகளை நீங்கள் பின்பற்றவில்லை என்பதை நீங்கள் ஒப்புக்கொள்ள வேண்டும். நீங்கள் இங்கே முன்மொழிந்து, வழிமொழியாத இந்தத் தீர்மானத்தை விவாதிப்பதிலே உங்கள் பக்கத்திலே ஏற்பட்ட குறைபாடுதான் இதற்குக் காரணம் என்பதை நீங்கள் உணர்ந்து கொள்ள வேண்டும் (குறுக்கீடு). மாண்புமிகு வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர்.

*மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் இந்தத் தீர்மானத்தை வழிமொழியத் தேவையில்லை என்று சொல்லிவிட்டு. நாங்கள் வழிமொழிய எழுந்தோம் என்று சொல்வது எந்த வகையில் முறையாகும் ? அந்த வகையில் எவ்வாறு இப்போது தங்களது விவாதத்திற்கு ஏற்றவாறு அதை மாற்றிக்கொள்கிறார்கள் என்பதைக் கேட்க விரும்புகிறேன் (குறுக்கீடு).

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : இதற்கும் திரு. அழகிரி அவர்கள் சேர்த்தே பதில் சொல்ல வேண்டும்.

திரு. ச. அழகிரி : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இப்போது இருக்கிற பிரச்சினை என்னவென்றால், ஏன் வழிமொழிய வேண்டும் என்பதுதான். எதிர்க்கட்சித் தலைவர் தன்னுடைய விவாதத்தைத் தொடங்கியிருப்பாரேயானால்தான், வழிமொழியாமல் அவர் தொடங்கிவிட்டார் என்ற பிரச்சினையே வரும். அவர் முன்மொழிந்து அமர்வதற்குள், நாங்கள் எழுந்து வழிமொழிவதற்குள் நீங்கள் ஒரு தீர்ப்பைச் சொல்ல முயற்சிக்கிறீர்கள். இது தவறு.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : விதிமுறைகள் தெளிவாக இருக்கின்றன. முன்மொழியப்பட்டு, வழிமொழியப்பட்டு, பேரவைத் தலைவர் அழைத்திருந்தால்தான், எதிர்க்கட்சித் தலைவரோ, அல்லது அந்தத் தீர்மானத்தை முன்மொழிந்தவரோ பேச முடியும் என்பதைக் கருத்திலேகொண்டு நீங்கள் பேச

வேண்டும். இங்கே அனுமதி கிடைக்காதபோது, '' அவர் பேசியிருப்பாரேயானால் '' என்று எப்படி நீங்கள் சொல்ல முடியும் ? தீர்மானம் வழிமொழியப்படாமலேயே கைவிடுகிற சூழ்நிலையை நீங்கள் உருவாக்கி இருக்கக் கூடாது. இப்போது உங்கள் தவறை மறைப்பதற்கு.....(குறுக்கீடு) மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு டாக்டர் ஜெ. ஜெயலலிதா : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, முதலில் இந்தத் தீர்மானத்தை வழிமொழியத் தேவையில்லை என்றார்கள். அடுத்து, வழிமொழிவதற்கு தாங்கள் அழைத்திருக்க வேண்டும் என்றார்கள். ஆனால், எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் திரும்பத் திரும்ப மேற்கோள் காட்டுகிற 1974 நிகழ்ச்சியின்போது, மரியாதைக்குரிய திருமதி ஜோதி வெங்கடாசலம் அவர்கள், இந்தப் பேரவையின் தலைவராக செயல்பட்டபோது—திரும்பவும் நினைவூட்டுகிறேன்—அவர் யாரையும் வழிமொழியச் சொல்லி அழைக்கவில்லை. அத்தகைய முன்மாதிரி அவைக்குறிப்புகளில் இல்லை. அன்றைய காலக்கட்டத்தில் இத்தகைய தீர்மானங்களைக் கொண்டுவந்து சட்டமன்ற உறுப்பினர்கள் அவையின் விதிமுறைகளை நன்றாகப் படித்துவிட்டு வந்து, ஒருவர் இந்தத் தீர்மானத்தை முன் மொழிந்தவுடன், அவர்களாகவே எழுந்து வழிமொழிந்தார்கள். பேரவை விதிகளைச் சரியாகப் படிக்காமல் தாங்கள் செய்ய வேண்டிய கடமைகளைத் தவற விட்டுவிட்டு, இப்போது பேரவைத் துணைத் தலைவர் மீது கோபப்படுவதில் அர்த்தமே இல்லை என்பதைச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி).

முற்பகல் 11.50

திரு. எஸ். ஆர். பாலசுப்ரமணியன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் மீண்டும் மீண்டும் சொல்கிறேன். தெளிவாக அன்றைய மாற்றுத் தலைவர் அவர்கள் அனவுன்ஸ் செய்திருக்கிறார். ஒருவர் அதை முன் மொழிய வேண்டும். பின்னர் வழிமொழியப்பட வேண்டும் என்று சொல்லித்தான் கோவை செழியனை அழைக்கிறார்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : வழிமொழியத் தேவையில்லை என்று நீங்கள் தான் முதலிலே சொன்னீர்கள்.

Thiru. S. R. Balasubramoniyan : After that there were points of order. (Interruption.)

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : நீங்கள் சொல்வது உங்கள் கருத்தையே நீங்கள் மறுப்பதாக அமைகிறது. முன்பு ''வழிமொழியப்படத் தேவையில்லை'' என்று சொன்னீர்கள். இப்பொழுது ''வழிமொழிய அழைத்திருக்கிறார்''

1993 ஏப்ரல் 19] [பேரவைத் துணைத் தலைவர்]

என்று நீங்கள் எங்கிருந்தோ இந்த அவைக் குறிப்பிலேயிருந்து ஓர் உதாரணத்தைக் கொண்டு வருகிறீர்கள். ஆகவே, உங்களுடைய கூற்றை நீங்களே மறுக்கிறீர்கள். (குறுக்கீடு).

திரு. எஸ். ஆர். பாலசுப்ரமணியன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நீங்கள் சொல்லவில்லை.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : நான் சொல்ல வேண்டுமென்று விதிமுறைகளிலே இல்லை. (குறுக்கீடு).

திரு. எஸ். ஆர். பாலசுப்ரமணியன் : பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, எனக்கு இப்பொழுது மைக் வரவில்லை.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : பேரவைத் துணைத் தலைவர் பேசுகின்றபோது மைக் உங்களுக்கு வராது. நீங்கள் பேசும் போதுதான் வரும். நான் உங்களைப் பேச அழைக்கும்போது நிச்சயமாக வரும். (குறுக்கீடு).

திரு. எஸ். ஆர். பாலசுப்ரமணியன் : நீங்கள் அறிவித்து இருக்க வேண்டும்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : அறிவிக்க வேண்டும் என்று கட்டாயப்படுத்த முடியாது. (குறுக்கீடு).

திரு. எஸ். ஆர். பாலசுப்ரமணியன் : பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஒருவராலே வழிமொழியப்பட வேண்டும் என்று தெரிவித்து இருக்க வேண்டும். ஜோதி வெங்கடாசலம் அவர்கள் அறிவித்திருக்கிறார்கள். நீங்கள் ஏன் அறிவிக்கவில்லை என்பதுதான் எங்களுடைய கேள்வி. நீங்கள் அறிவிக்கவில்லை. நான் முன்மொழிந்தவுடனேயே, நீங்கள் சொல்கிறீர்கள், Resolution is dropped.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : நான் சற்று அவகாசம் கொடுத்தேன். மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் இவ்வாறு உண்மைக்கு புறம்பாகச் சொல்லக்கூடாது. நான் அவகாசம் கொடுத்தேன். அதை நீங்கள் பயன்படுத்திக் கொள்ளவில்லை. இந்த தீர்மானத்தைக் கொடுத்த எந்த உறுப்பினரும் பயன்படுத்திக் கொள்ளவில்லை. அதைப் பயன்படுத்திக் கொள்ளத் தவறி விட்டீர்கள். விதிமுறைகளை நீங்கள் கடைபிடிக்கத் தவறி விட்டீர்கள். அதுதான் உண்மை.

திரு. எஸ். ஆர். பாலசுப்ரமணியன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, விவாதம் எவ்வளவு நேரம் என்று கேட்டுத்தான் சொல்ல வேண்டும். நீங்களாக எப்படிச் சொல்ல முடியும் ?

[1993 ஏப்ரல் 19

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : அதெல்லாம் எப்போது வருகிறது ? அந்தத் தீர்மானம் விவாதத்திற்கு எடுத்துக் கொள்ளப்படும்போதுதான் வருகிறது. அனுமதிக்கப்பட்ட பின்பு, எடுத்துக் கொள்ளப்பட்ட பின்புதான் அது வருகிறது.

திரு. எஸ். ஆர். பாலசுப்ரமணியன் : பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, பின்னர் எப்படி இரண்டு மணி நேரம் என்று சொன்னீர்கள் ?

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : நேரத்தை நிர்ணயிக்கப் பேரவைத் துணைத் தலைவருக்கு உரிமை இருக்கிறது. முன்மாதிரி இருக்கிறது, அதை வேண்டுமானால் படித்துக் காட்டுகிறேன். முன்பு அதற்கு 2 மணி நேரம் என்று சொல்லி, அதை விவாதித்து முடித்திருக்கிறார்கள் என்பதையும் நான் மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. எஸ். ஆர். பாலசுப்ரமணியன் : பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தவறாகச் சொல்லாதீர்கள்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: குறிப்பிடப்பட்டது இரண்டு மணி நேரம். நீட்டிக்கப்பட்டதனால் 150 நிமிடம் (குறுக்கீடு).

திரு. எஸ். ஆர். பாலசுப்ரமணியன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அப்படி இல்லை. You can take 150 Minutes. என்று அவை முன்னவர் அன்றைய தினம் கொடுத்து இருக்கிறார். குறிப்பிலே இருக்கிறது. அன்றைய தினம் அவை முன்னவராக இருந்த இன்றைய அவை முன்னவர், 150 நிமிடங்கள் எடுத்துக் கொள்ளலாம் ஒழுங்குப் பிரச்சினையிலே, காலத்தைத் தள்ளி இருக்க வேண்டாம் என்றார். திரு. கே.எம். குமாரசாமி கேட்கிறார், ஒழுங்குப் பிரச்சினைக்கே 10, 15 நிமிடங்கள் ஆகிவிட்டதே, இதைத் தவிர இன்னும் 150 நிமிஷம் எடுத்துக் கொள்ளலாமே என்று கேட்கிறார். இரண்டு பேர் பேசலாம் என்று சொல்லியிருக்கிறார். எல்லாமே அவைக் குறிப்பில் இருக்கிறது.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : அது எப்பொழுது ? இறுதியில். 9-3-1974-ல் பேரவைத் துணைத் தலைவரைப் பதவியில் இருந்து நீக்க வேண்டுமென்ற தீர்மானம் வந்தபொழுது 10-30 லிருந்து 1 மணி வரை விவாதம் நடந்தது, விவாதம் தொடங்குவதற்கு முன்பே 2 மணி நேரம் விவாதத்திற்கு என்று நிர்ணயிக்கப்பட்டது. பக்கம் 674-ஐத் தயவு செய்து பாருங்கள்.

1993 ஏப்ரல் 19]

திரு. எஸ். ஆர். பாலசுப்ரமணியன் : பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, பிசினஸ் அட்வைசரி கமிட்டி கூடவில்லையே ?

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : அதற்கு அலுவல் ஆய்வுக் குழு கூடவேண்டுமென்று இல்லை. ஒரு விவாதத்திற்கு நேரத்தை நிர்ணயிக்கின்ற கடமையும், பொறுப்பும், உரிமையும் தலைவருக்கே உண்டு என்ற முன்மாதிரிகள் இருக்கின்றன. விதி 108-ஐ நீங்கள் தயவுசெய்து பார்க்க வேண்டும். (குறுக்கீடு) மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர்.

* மாண்புமிகு திரு. கு. ப. கிருஷ்ணன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நீங்கள் கேள்வி நேரம் முடிந்தவுடன், சட்டப்பேரவைத் தலைவர் மீது நம்பிக்கையில்லாத் தீர்மானத்தை முன்மொழிந்திருக்கிறார்கள் என்பதை..(குறுக்கீடு) அதற்கு யார் யார் கொடுத்திருக்கிறார்கள் என்பதைப் படித்தீர்கள். படித்து முடித்த உடனேயே எதிர்க்கட்சித் தலைவர் எழுந்து பேச ஆரம்பித்தார். அப்போது நீங்கள் அவருடைய கவனத்திற்குச் சொன்னீர்கள். முன்மொழிய வேண்டுமென்று சொன்னீர்கள். எனவே, ஒரு தீர்மானத்தை..(குறுக்கீடு)

Thiru S. R. Balasubramoniyan: That was on a point of order saying that the Deputy Speaker should not occupy the chair.

மாண்புமிகு திரு. கு. ப. கிருஷ்ணன் : நீங்கள் முறைப்படி யார் யார் கொடுத்திருக்கிறார்கள் என்று படித்ததற்குப் பிறகு இவர்கள் இந்தத் தீர்மானத்தை முன்மொழிய வேண்டும் என்று தெரியாமல் அந்தத் தீர்மானத்திலே பேச விழைந்தார்கள். அப்போது நீங்கள் குறிப்பிட்டுக் காண்பித்தீர்கள். நீங்கள் முன்மொழிய வேண்டுமென்று சொன்னீர்கள். நீங்கள் சொன்னதற்குப் பிறகு முன் மொழிந்தார்கள். வழிமொழிய யாருமே இல்லை. ஒரு தீர்மானத்தைக் கொடுக்கின்றவர்களுக்கு அதை வழிமொழிய வேண்டும் என்று இருக்கும் மரபு தெரியாமல் வாதிடுவது எந்த முறையிலே நியாயம் என்பதனைத் தெரிவிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். (குறுக்கீடு).

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : பாயின்ட் ஆப் ஆர்டர், திரு. கா. ப. பட்டாபிராமன்.

* திரு. கா. ப. பட்டாபிராமன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இங்கே இருக்கிற, இப்போது நாம் எடுக்க வேண்டிய முடிவு எல்லாம், இந்தத் தீர்மானம் இந்த அவைக்குக் கொண்டு வரப்பட்டு,

that resolution has been permitted to be moved before this Assembly Now, when the House has granted leave, to the Hon. Leader of the Opposition.....(Interruption)

When the Deputy Speaker has permitted the Hon. Leader of the Opposition, to move the resolution he has started reading the resolution. When once leave is granted for the moving of the resolution, the resolution becomes a Motion. What is defined in respect of the Motion is—in the defintion section 2 of sub-section (r) " any matter that is brought before this House for discussion is a motion ". If rule 97 (2) is taken ' when a motion is on the part of the person who has moved the resolution for becoming a motion to second it. I also brought to the notice of the Hon. Deputy Speaker, when the resolution has been read out, the Hon. Deputy Speaker delayed for some time. I have recorded it. (Interruption) I have recorded it, and I have also said that Hon. Deputy Speaker has given a chance for the persons who have moved the resolution for seconding it. (Interruption.)

முற்பகல் 11-55

ஆகையினால் இந்த அவையிலே அந்தத் தீர்மானம் முறையற்றதாக இருப்பதாகக் கருதப்பட்டு, அது கைவிடப்பட்டிருக்கிறது. ஒரு தீர்மானம் கைவிடப்படுகிறது என்று சொன்னால், அந்தத் தீர்மானத்தை வேண்டுமென்றால், எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் இன்னொரு புதிய தீர்மானமாகக் கொண்டு வந்து, இந்த முறையிலே அவர்கள் கவனங்களைப் புரிந்து கொண்டு, இந்த முறைகளை எல்லாம் திருத்திக் கொள்ளலாம். எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் சட்டம் படித்தவர்கள், அவர்களுக்கே தெரியும், தீர்மானம் முன்மொழியப்படுகிறது என்று சொன்னால். அந்தத் தீர்மானம் வழிமொழியப்பெற வேண்டும் என்று சொல்லத் தேவையில்லை. (குறுக்கீடுகள்).

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : மாண்புமிகு அரசுக் கொறடா அவர்கள் இங்கே உரையாற்றிக் கொண்டிருக்கும் போது மற்ற உறுப்பினர்கள் தயவுசெய்து அமர வேண்டும். (குறுக்கீடு) அவர் முடிக்கட்டும். அவர் அழைக்கப்பட்டு இருக்கிறார். (குறுக்கீடு) மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர். நீங்களே பேசுகிறீர்கள். நீங்களே குறுக்கிடுகிறீர்கள். (குறுக்கீடு) அவர் முடிக்கட்டும், அவர் முடிக்கவில்லை. ஒவ்வொரு முறையும் எதிர்க்கட்சித் தலைவர் எழுந்தபோது அவருக்கு அனுமதி தரப்பட்டிருக்கிறது. பேசியிருக்கிறார்கள். குறிப்பி

1993 ஏப்ரல் 19] [பேரவைத் துணைத் தலைவர்]

லேயிருக்கிறது. (குறுக்கீடு) அவர் முடிக்கட்டும். நீங்கள் முடிந்தால் அதற்குப் பதில் சொல்லுங்கள். இப்போது உட்காருங்கள். தயவு செய்து உட்காருங்கள். (குறுக்கீடுகள்).

திரு. கா. ப. பட்டாபிராமன் : I am not yielding.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : He is not yielding திரு. பட்டாபிராமன் அவர்கள் தொடர்ந்து பேசலாம்.

திரு. கா. ப. பட்டாபிராமன் : ஆகவே, இந்தத் தீர்மானம் கைவிடப்பட்டுவிட்டது என்று அவைத் துணைத் தலைவர் ஒரு முடிவை அறிவித்துவிட்ட பிறகு அந்த முடிவிற்கு மேலே இங்கே இப்படி விவாதங்கள் இருக்குமேயானால் அது சரியான மாண்பாக, மரபாக இருக்குமா? இந்த அவையினுடைய இறையாண்மையாக இருக்குமா? என்பது என்னுடைய கேள்வி. (குறுக்கீடு). நான் பேசி முடிக்கவில்லை. (குறுக்கீடு) நான் பேசி முடிக்கவில்லை. ஆகவே, மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இது சம்பந்தமான பிரச்சினையை இத்தோடு முடித்துவிட்டு நாம் மானியக் கோரிக்கைகள் மீது விவாதிக்க அனுமதிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : மாண்புமிகு அவை முன்னவர்.

* மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் நீக்கப்பட வேண்டுமென்ற தீர்மானத்தை கொண்டுவந்த போதே, அது முறையில்லாமல் வந்து இருக்கிறது என்று திருப்பிவிட்டு, மறுபடியும் கொண்டு வந்து சேர்க்கப்பட்டிருக்கிறது. பிறகு முறையோடு தீர்மானம் கொண்டு வரப்பட்டது. அதேமாதிரி இங்கே தீர்மானம் கொண்டு வந்து, அதை நிறைவேற்ற முடியாத முறையில் சட்டத் திட்டத்திலே முறைப்படி நிறைவேற்றாததன் காரணமாக கைவிடப்பட்டது என்று சொல்லியிருக்கிறீர்கள். மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் முறையோடு தீர்மானத்தைக் கொண்டு வந்து விவாதிப்பதைப் பற்றி ஆட்சேபனை இல்லை. அதை விவாதிப்பதற்கு நாங்கள் தயாராக இருக்கிறோம். (மேசையைத் தட்டும் ஒலி). அவர்களும் எடுத்துச் சொல்லலாம். (குறுக்கீடு).

தயாராக இருக்கிறோம், முறையாகக் கொண்டு வந்தால் நாங்கள், விவாதிப்பதற்குத் தயாராகஇருக்கிறோம். (குறுக்கீடு) தெளிவாகத் தான் இருக்கிறேன். அதற்கு வேண்டிய ரெக்கார்டுகள் எல்லாம் வைத்துக் கொண்டு தான் வந்திருக்கிறேனே தவிர வேறு எதுவும் இல்லை. (குறுக்கீடு) தயாராக இருக்கிறோம், முறையாக வர வேண்டும் என்பதை மட்டும் வலியுறுத்துகிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்களே, மவுலாங்கர் என்ற மரபு மீக்க பேரவைத் தலைவர் மீது நம்பிக்கை இல்லாத் தீர்மானம் கொண்டு வந்து நாடாளுமன்றத்தில் விவாதம் நடந்தது. நிச்சயமாக உங்களுக்குத் தெரிந்திருக்கும். அங்கே இரண்டு மணி நேரம் தான் ஒதுக்கப்பட்டு அறிவிக்கப்பட்டது. 13.30 முதல் 15.30 வரை என்று அன்றைய துணைத் தலைவர்தான் நிர்ணயித்து அறிவித்தார்கள் என்பதையும் உங்களுக்குத் தகவலாக தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. எஸ். ஆர். பாலசுப்ரமணியன் : மவுலாங்கர் என்ற காரணத்தினாலே, மவுலாங்கர் பற்றி ஒரு வார்த்தை. அந்தத் தீர்மானத்தின்போது, இதேபோன்று பல ஒழுங்குப் பிரச்சினைகள் எழுப்பப்பட்டு, தீர்மானம் முறையாக முன்மொழியப் பெறவில்லை. தீர்மானம் முறையாக அமையவில்லை என்று சொன்ன நேரத்திலே, அவர்கள் சொன்னார்கள்.

" Therefore, unless there are specific charges to be met and of which due notice has been given, this resolution is clearly out of order. But as the Hon. Leader of the House said, on a technicality with respect to such a serious matter, I do not want to dis-allow this motion. என் றதைரியம் அவருக்கு இருந்தது. ஏன் உங்களுக்கு அந்த தைரியம் இல்லை ? சந்திக்க பயப்படுகிறீர்கள். (குறுக்கீடுகள்) Though it was not in order . . . (Interruption).

நண்பகல் 12-00

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் ஒன்றைப் புரிந்து கொள்ள வேண்டும். இங்கேயும் நீங்கள் இந்தத் தீர்மானத்தில் எந்தவிதமான குறிப்பிட்ட குற்றச்சாட்டும் சொல்லவில்லை. அப்படி இருந்தும் மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் அனுமதித்திருக்கிறார்கள். மாண்புமிகு அவை முன்னவர் அவர்கள் அதை ஏற்று இருக்கிறார்கள். மாண்புமிகு முதலமைச்சரும் அதற்கு

1993 ஏப்ரல் 19] [பேரவைத் துணைத் தலைவர்]

ஆட்சேபணை தெரிவிக்கவில்லை. அங்கே எப்படி நடந்ததோ அதைப்போலவே இங்கும் பெருந்தன்மையோடு, நீங்கள் எந்தக் குற்றச்சாட்டுகளையும் குறிப்பிட்டுக் கூறாமல் அந்தத் தீர்மானத்தைக் கொடுத்திருந்தாலும் அந்தத் தீர்மானம் ஏற்றுக் கொள்ளப்பட்டிருக்கிறது. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு டாக்டர் ஜெ. ஜெயலலிதா : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இத்தகைய ஒரு தீர்மானத்தைக் கொண்டு வரக்கூடாது என்று நாங்கள் நினைக்கவில்லை. இதை ஃபேஸ் பண்ணுவதற்கு, சமாளிப்பதற்கு நாங்கள் பயப்படவும் இல்லை. (மேசையைத் தட்டும் ஒலி) தயாராகவே இருக்கிறோம். ஆனால் பொதுவாக எதிர்க்கட்சிக்காரர்களுக்குக் கொஞ்சம் அவசரம் அதிகமாக இருக்கிறது. அவர்கள் இத்தகைய ஒரு தீர்மானத்தை எழுதிக் கொடுத்தபோதே சில மரபுகளை மறந்து, அவற்றைக் கடைபிடிக்காமல் அவர்கள் சரியான முறைப்படி கடிதம் கொடுக்காததால் ஒருமுறை அந்தக் கடிதம் திருப்பி விடப்பட்டது. அதன் பிறகு இரண்டாவது முறை அவர்கள் எழுதிக் கொடுத்த பின்னால், அதாவது எப்படி எழுதிக் கொடுக்க வேண்டும் என்று சொல்லி எழுதச் சொன்ன பிறகு, அந்தக் கடிதம் ஏற்றுக் கொள்ளப்பட்டது. அதன் பிறகு இன்று அந்தத் தீர்மானம் கொடுக்கப்பட்டிருக்கிறது என்று பேரவைத் துணைத் தலைவர் அவர்கள் அறிவித்த போது 36 உறுப்பினர்களும் சேர்ந்து கொடுத்திருக்கிறோம் என்று சொன்ன போது—அவ்வளவு அவசரம், எனவே—எதிர்க்கட்சித் தலைவர் எழுந்து முன்மொழியாமலே பேச ஆரம்பித்து விட்டார். உடனே துணைத் தலைவர் அவர்கள் ஞாபகப்படுத்தி, நீங்கள் தீர்மானத்தை முன் மொழிய வேண்டும் என்று சொல்லிக் கொடுத்து அதன் பிறகு அவர்கள் முன்மொழிந்தார்கள். அதன் பிறகும்—அவ்வளவு அவசரம், எனவே—அதை வழிமொழிய வேண்டும் என்பது அவர்களுக்கு மறந்து விட்டது. (மேசையைத் தட்டும் ஒலி) அதைப் போலவே முறையாக தேர்தல் வரும் வரை காத்து இருக்காமல் ஆட்சியைப் பிடிக்க வேண்டும் என்று அவசரப்படுகிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) இந்த அவசரம் அவர்களை எங்கே கொண்டு விடுமோ என்பதுதான் புரியவில்லை, மிகவும் கவலையாக இருக்கிறது என்பதை மட்டும் சொல்லிக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர்.

திரு. எஸ். ஆர். பாலசுப்ரமணியன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, முதலிலே நான் கொடுத்தத் தீர்மானத்தை நிராகரித்த முறையும் சரியல்ல. I am giving notice என்று பலர் கையெழுத்துப் போட்டுக் கொடுப்பது என்பது சாதாரணமாக தினசரி கொடுப்பதுதான், விதி 55, 56-லே 'I am' என்று சொல்லி விட்டு பலர் கையெழுத்துப்

[திரு. எஸ். ஆர். பாலசுப்ரமணியன்] [1993 ஏப்ரல் 19

போடுகிற முறை இருக்கிறது. தவறு ஏதும் இருந்தால் செயலகம் எங்களுக்குக் காட்டியிருக்க வேண்டும், இதில் தவறு இருக்கிறது என்று சொல்லி.....

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : Copy to the Hon. Speaker என்று இல்லாததால், அந்தக் குறைபாடு காரணமாகத் திருப்பி அனுப்பப்பட்டது என்று பேரவைச் செயலர் அவர்கள் என்னிடத்தில் தெரிவித்து இருக்கிறார்கள்.

திரு. எஸ். ஆர். பாலசுப்ரமணியன் : துணைத் தலைவர் அவர்களே, we gave three copies.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : அந்த மூன்று நகல்களிலுமே அது இல்லை.

திரு. எஸ். ஆர். பாலசுப்ரமணியன் : தலைவர் அவர்களே, தவறான தகவலை அவைக்குத் தராதீர்கள். ஒன்றுக்கு மேலாக 3 கொடுத்தோம். அதிலே ஒன்றைப் பேரவைத் தலைவருக்கு அனுப்பி இருக்க வேண்டும். உங்களுக்கு இந்தத் தீர்மானத்தைச் சந்திக்கிற தைரியம் இல்லாத காரணத்தால் இங்கே சாக்குப் போக்கு சொல்லிக் கொண்டிருக்கிறீர்கள். Face it.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்களே (குறுக்கீடு) நீங்கள் விதி முறைகளைக் கடைப்பிடிக்கத் தவறியதை ஒத்துக்கொள்ள வேண்டும். (குறுக்கீடுகள்.)

திரு. எஸ். ஆர். பாலசுப்ரமணியன் : தைரியம் இருந்தால் சந்தியுங்கள். You should face it.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, எங்களுக்கு இந்தத் தீர்மானத்தைச் சந்திக்கிற தைரியம் இல்லை என்று மாண்புமிகு எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள் சொன்னார்கள். (குறுக்கீடு) மாண்புமிகு டாக்டர் நாவலர் அவர்கள் ஏற்கெனவே தயாராக இருக்கிறேன் என்று சொல்லிவிட்டார்கள். எங்களுக்கு இப்போது ஏற்படுகிற சந்தேகம் என்னவென்று சொன்னால், ஒவ்வொரு முறையும் இந்தத் தீர்மானத்தைத் தவறு, தவறாகவே கொண்டு வருகிறீர்கள். உங்களுக்கு இதில் பேசுவதற்கு எதுவும் சப்ஜக்ட் இல்லாமல், அந்தப் பயம் காரணமாக தவறாகவே நீங்கள் கொடுத்திருக்கிறீர்களோ என்று தோன்றுகிறது. இதுதான்

1993 ஏப்ரல் 19] [திரு. சு. முத்துசாமி]

எங்களுக்கு ஏற்பட்டு இருக்கிற சந்தேகம். எனவே பத்திரிகையில் செய்திகள் வரவேண்டும். ஆனால் பேசுவதற்கு ஒன்றும் செய்தி இல்லாத காரணத்தால் நீங்கள் தவறாகவே கொடுத்திருக்கிறீர்களோ என்றுதான் நாங்கள் கருதுகிறோம்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர்.

மாண்புமிகு திரு. கு. ப. கிருஷ்ணன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, (குறுக்கீடு).

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : மாண்புமிகு எதிர்க் கட்சித் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் எந்த நேரத்திலும் குறுக்கிட்டுப் பேசலாம் என்றிருக்கிறது. எதிர்க் கட்சித் தலைவருக்கு சிறப்பு அனுமதி இருந்தாலும் கூட there is a limitation (குறுக்கீடு) அமைச்சர் அவர்களைப் பற்றிச் சொல்லும்போது அங்கே லிமிட்டேஷன் இல்லை. ஆனால் எதிர்க் கட்சித் தலைவருக்கு அந்த லிமிட்டேஷன் இருக்கிறது.

பிற்பகல் 12-05

திரு. எஸ். ஆர். பாலசுப்ரமணியன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, (குறுக்கீடு) 1978-ஆம் ஆண்டு..... (குறுக்கீடு).

மாண்புமிகு திரு. கு. ப. கிருஷ்ணன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே..... (குறுக்கீடு) மினிஸ்டருக்கா, எதிர்க் கட்சித் தலைவருக்கா? நமக்கா அவர்களுக்கா? நான் சொல்லட்டுமா, வேண்டாமா? மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அமைச்சர் நான் எழுந்து பேசுகின்றபோது..... (குறுக்கீடுகள்).

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : திரு. ப. ரங்கநாதன், உட்காருங்கள். (குறுக்கீடு) இல்லை உண்மை இல்லாத சில கருத்துக்களைச் சொல்லும் போது உறுப்பினர்கள் குறுக்கிடுவது இயற்கைதான். எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள் முடிந்தவரை தவிர்த்துக் கொள்ள முயற்சிக்க வேண்டும். (குறுக்கீடுகள்) நான் சொல்லிவிடுகிறேன். கம்பெண்டியம் ஆப் ரூலிங்ஸ், 1969 வால்யூம் 16 பக்கம் 262-263. மாண்புமிகு எதிர்க் கட்சித் தலைவர் அவர்களுடைய பார்வைக்கு.

"On 29th January 1969, the Leader of the Opposition interrupted the speech of a Member twice or thrice. Thereupon, the Chair observed that, while the Leader of the Opposition had certain privileges not enjoyed by the other Members, he might refrain from making such frequent

interruptions which were not meant to clear the contradictory views but were only meant to refute the views expressed by the Members. He would do well to wait till he got a chance later and, then, offer his comments on the views of the Member." என்று தெளிவாக இருக்கிறது. (குறுக்கீடுகள்) முன்பு ஒரு தீர்ப்பு வழங்கப்பட்டிருக்கிறது என்பதை தங்களுடைய கனிவான பார்வைக்கு நான் வைக்கிறேன்.

திரு. எஸ். ஆர். பாலசுப்ரமணியன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, 1978 ஆம் ஆண்டு மக்கள் அவையிலே அன்றைய தினம் சபாநாயகராக இருந்தவர், சுப்ரீம் கோர்ட் ஓய்வு பெற்ற நீதிபதி சொல்கிறார், Minister wants to make a statement. என்று சொன்னதற்குப் பின்னாலே, ஸ்டேபன் பேச வேண்டுமென்று கேட்கிறார். அவர் சொல்கிறார்.

"Whenever a Minister or the Leader of the Opposition, who is of the rank of a Minister, wishes to make a statement, the Chair always permits; and this is not a precedent, this is the normal convention of the House, The Leader of the Opposition has been given the same rank as that of a Minister" என்று தெளிவாக ஹெக்டே வினுடைய தீர்ப்பு இருக்கிறது. நவம்பர் மாதம் 28-ஆம் தேதி 1978, லோக் சபா. You are bound by it. You cannot go against it. (குறுக்கீடு) எவ்வளவு வேண்டும் ? May's Parliamentary Practice வேண்டுமா? நான் படித்துக் காட்டுகிறேன்.

"The Leader of the Opposition, by custom, is accorded certain peculiar rights in asking questions of Ministers". It is there in May's Parliamentary Practice. You cannot say that I do not have the privileges. I have the privileges. Only in this House, I am not being allowed to interrupt and I have been denied the right to speak.

Hon. Dr. J. Jayalalitha : Mr. Deputy Speaker, no one is disputing the fact that the Leader of the Opposition has got certain special rights and privileges. But, there is a limit as to how far and how long the Leader of the Opposition can be allowed to waste the time of the house, to take up the time of the House and to monopolise the time of the House. Though the Leader of the Opposition may have certain rights, he cannot be allowed to monopolise the entire time of the House. கடந்த 2 ஆண்டு காலமாக இந்த புதிய சட்டப்பேரவை அமைந்த

1993 ஏப்ரல் 19] [டாக்டர் ஜெ. ஜெயலலிதா]

பிறகு நடைபெற்ற அனைத்து விவாதங்களிலே, கூட்டத் தொடர்களிலே நாம் கணக்கெடுத்துப் பார்த்தோமேயானால், the maximum time of the House has been taken by the Leader of the Opposition. At every conceivable opportunity, he rises and interrupts; and he is always allowed by the Chair. And, yet, he goes out and says he is not being given an opportunity to speak, Even today கேள்வி நேரம் முடிந்த பிறகு, for the past one hour, the Leader of the Opposition has been taking the maximum time in this House and, yet, he stands and says that he is not being allowed to express his views. மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஏற்கனவே தாங்கள் பேரவைத் தலைவர் அவர்களை பதவியை விட்டு நீக்க வேண்டுமென்ற தீர்மானம் கைவிடப்பட்டதாக அறிவித்ததால், மேலும் எதிர்க் கட்சித் தலைவர் அவர்களோ, மற்றவர்களோ இந்த அவையின் நேரத்தை வீணடிக்க அனுமதிக்காமல் அவையின் பிற அலுவல்களை எடுத்துக் கொள்ள வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி).

மாண்புமிகு பேரவைத் துணை தலைவர் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் பதவி நீக்கக் கோரும் இப் பிரச்சினை கைவிடப்பட்டது என்று பேரவைத் துணைத் தலைவரால் முன்பே அறிவிக்கப்பட்டுவிட்டதால் இப்பிரச்சினையை இத்தோடு முடித்து அடுத்த அலுவலுக்குச் செல்லலாம் என்று நான் கருதுகிறேன். (குறுக்கீடுகள்) பாயின்ட் ஆஃப் ஆர்டர் கிடையாது. (குறுக்கீடுகள்).

பிற்பகல் 12–10

திரு. எஸ். ஆர். பாலசுப்ரமணியன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, சந்திப்பதற்கு இவ்வளவு பயமா ? (கூச்சல், குழப்பம்).

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : நான் அவரைப் பேச அனுமதிக்கவில்லை. (குறுக்கீடுகள்) I have not called him.

Thiru S. R. Balasubramoniyan : You allowed him.

Mr. Deputy Speaker : I have not allowed him. (குறுக்கீடுகள்) எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள் தன்னிச்சையாகக் குற்றச்சாட்டுகளை இங்கே சொல்லக் கூடாது. (குறுக்கீடுகள்) அரசுக் கொறடாவை நான் பேச அழைக்கவில்லை. (குறுக்கீடுகள்) , மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர். (குறுக்கீடுகள்)

[1993 ஏப்ரல் 19

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, (கூச்சல் குழப்பம்).

(இந்திய தேசியக் காங்கிரஸ் கட்சி உறுப்பினர்கள் வெளிநடப்புச் செய்தனர்).

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : மாண்புமிகு உறுப்பினர் திருநாவுக்கரசு அவர்களுக்கு வாய்ப்புத் தரப்படுகிறது. நீங்கள் ஒரு நிமிடம் இருங்கள். (குறுக்கீடுகள்).

(திரு. எஸ். திருநாவுக்கரசு அவையை விட்டு வெளியேறினார்.)

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : இந்த அவையில் காலையில் இந்த விவாதம் எடுத்துக் கொள்ளப்பட வேண்டுமென்ற முடிவுக்கு வந்து, அந்தத் தீர்மானம் இங்கே எடுத்துக் கொள்ளப்படுவதற்குப் பேரவை இசைவு அளிக்கிறதா என்று நான் கேட்டபோது அதற்கு ஆதரவாக 35-க்கும் அதிகமான உறுப்பினர்கள் எழுந்து நின்றதால் அதற்கு அவை அனுமதி அளிக்கிறது என்று கருதி அதை அறிவித்து, அந்தத் தீர்மானத்தை முன்மொழிய வேண்டுமென்று மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்களை நான் கேட்டுக் கொண்டேன். ஆனால் முன்மொழியாமலேயே அவர் அந்தத் தீர்மானத்தின்மீது பேசத் தொடங்கினார். நான் அவருக்கு மீண்டும் நினைவூட்டி முன்மொழிய வேண்டுமென்று சொன்னதன் பேரில் அவர் முன் மொழிந்தார். முன்மொழிந்து முடித்ததும் சிறிது நேரம் அவகாசம் கொடுத்து யாராவது ஒரு உறுப்பினர் அந்தத் தீர்மானத்தை வழி மொழிகிறார்களா என்று காத்திருந்து பார்த்து, எவரும் எழுந்து வழிமொழியாத காரணத்தால் பேரவையின் விதி 97(2)-ன்படி வழிமொழியப் பெறாத எந்த ஒரு தீர்மானமும் உடனடியாக கைவிடப்பட வேண்டுமென்று இருப்பதால் அது கைவிடப்பட்டது என்று நான் அறிவித்தேன். அவர்கள் கொடுத்த தீர்மானத்திலும் எந்த விதமான குறிப்பிட்ட குற்றச்சாட்டுகளும் இல்லை. அப்படி இருந்த நேரத்திலே, சில முந்தைய நிகழ்வுகளில் குறிப்பிட்ட குற்றச்சாட்டுகளோடுதான் தீர்மானம் வர வேண்டுமென்றுகூட அவையிலே விவாதித்திருக்கிறார்கள். இருந்தாலும்கூட பெருந்தன்மையோடு குற்றச்சாட்டுகள் குறிப்பிட்டுக் கூறப்படாத நிலையிலும் அந்தத் தீர்மானம் இந்தப் பேரவையிலே விவாதிப்பதற்கு எடுத்துக் கொள்ளப்படலாம் என்று மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் அனுமதி அளித்திருந்தார்கள். அந்த அடிப்படையிலேதான் அனுமதி வழங்கப் பட்டது. இதிலே எந்தவிதமான முறைகேடும் நடக்கவில்லை. விதிகள் முறையாகப் பின்பற்றப்பட்டன. விதிமுறைகளை முழுமையாகப் பின்பற்ற மறந்து விட்டு அல்லது தவறிவிட்டு அதை நியாயப்படுத்துகின்ற வகையிலே இங்கே கூச்சலும் குழப்

1973 ஏப்ரல் 19] [பேரவைத் துணைத் தலைவர்]

பமும் ஏற்படுத்தி, ஏறத்தாழ இந்த அவையின் நேரத்தை ஒரு மணி நேரத்திற்கு மேலாக வீணாக்கிவிட்டு இப்பொழுது, அவர்கள் தவறை மறைப்பதற்காக இங்கிருந்து வெளி நடப்புச் செய்திருக்கிறார்கள் என்றுதான் கருத வேண்டியிருக்கிறது. மாண்புமிகு முதலமைச்சர் அவர்களும் மாண்புமிகு அவை முன்னவர் அவர்களும் இங்கே தெளிவாக எடுத்துச் சொன்னார்கள். குறைகள் இல்லாமல் இந்த அவையிலே ஒரு தீர்மானம் எந்த முறையில் முறையாகத் தரப்பட வேண்டுமோ அந்த வகையில் நீங்கள் எப்பொழுது வேண்டுமானாலும் தரலாம், அதைச் சந்திப்பதற்கு நாங்கள் தயாராக இருக்கிறோம் என்ற பதிலைச் சொல்லிய பிறகும், அதை ஏற்றுக் கொள்ளாமல், அவர்கள் முறைப்படி இங்கே வழிமொழிய தவறிவிட்டு தீர்மானத்தை எடுத்துக் கொள்ளவில்லை என்று உண்மைக்குப் புறம்பாக ஒரு குற்றச்சாட்டைச் சாட்டி, இங்கிருந்து மாண்புமிகு உறுப்பினர்கள் இன்று வெளி நடப்புச் செய்திருக்கிறார்கள் என்பதை இந்த அவைக்கு நான் தெரிவித்துக்கொள்கிறேன். மாண்புமிகு அவை முன்னவர்.

பிற்பகல் 12–15

*மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இங்கே முக்கிய எதிர்க்கட்சியாக விளங்குகின்ற காங்கிரஸ் கட்சியின் சார்பாக மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களை பொறுப்பிலிருந்து நீக்கக் கோருகின்ற தீர்மானத்தை கொண்டு வருவதைப் பற்றி எங்களுக்கு எந்தவித மறுப்பும் இல்லை. ஆக, எப்படிப்பட்ட நம்பிக்கையில்லாத தீர்மானங்கள் வந்தாலும் அவற்றைச் சமாளிக்கும் அளவுக்குத்தான் இன்றைய அரசு இருக்கிறது. (மேசையைத் தட்டும் ஒலி) ஆனால் அவர்கள் முறைப்படி கொண்டு வர வேண்டும், விதி முறைகளின்படி கொண்டு வர வேண்டும் என்பதைத் தவிர ஒன்றுமில்லை. எந்தத் தீர்மானத்தைக் கொண்டு வந்தாலும், மீண்டும் அந்தத் தீர்மானத்தை அவர்கள் முறைப்படி கொண்டு வந்து விட்டார்களானால், எப்படிப்பட்ட குற்றச்சாட்டை அவர்கள் சாட்டினாலும், எப்படிப்பட்ட குறைகளை அவர்கள் எடுத்துச் சொன்னாலும், அவைகளுக்கெல்லாம் முழுவதும் விடையிறுக்கத்தான் நாங்கள் ஆயத்தமாக இருக்கிறோம்.

அதற்குப் பிறகு பெரும்பான்மை, சிறுபான்மை என்பது ஒரு முடிவெடுக்கும்போது கணக்கில் எடுத்துக் கொள்கின்ற ஒன்றாகும். விவாதத்தைப் பொறுத்தவரையிலும் பெரும்பான்மை, சிறுபான்மை இல்லை. எதிர்க் கட்சித் தரப்பிலே இருக்கிறவர்கள் விவாதிக்க வேண்டும், கருத்துக்களைச் சொல்ல வேண்டும். அதற்கு ஏற்ற கருத்துக்களை நாங்களும் சொல்ல வேண்டும். அப்பொழுதுதான் இந்த மன்றத்தில் மட்டுமல்லாமல், நாட்டில் உள்ளவர்களும் தெளிவாகப் புரிந்து கொள்வார்கள் என்பதால்

[டாக்டர் இரா. நெடுஞ்செழியன்] [1993 ஏப்ரல் 19

அவர்களைவிட நான் மிக மிக ஆவலோடு எதிர்பார்த்துக் கொண்டிருந்தேன். இந்தத் தீர்மானம் வரட்டும் வந்து பேசட்டும், அதற்கான காரண காரிய விளக்கங்களைச் சொல்லலாம் என்று இருந்தேன். அதற்கு இந்த அரசு, ஆட்சி அஞ்சவில்லை. ஆனால் முறைப்படி அந்தத் தீர்மானம் வர வேண்டுமென்பதற்காகத்தான் கைவிடப்பட்டிருக்கிறதே தவிர, வேறல்ல. முறைப்படி இந்தத் தீர்மானம் வருமானால், இந்த அவையிலே இந்தத் தீர்மானத்தைச் சமாளிக்க இந்த ஆட்சி தயாராக இருக்கிறது என்பதையும் இந்த வாய்ப்பிலே கூறிக் கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : இந்தப் பிரச்சினையை இதோடு விட்டு விட்டு.....

திரு. இளம்வழுதி : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே.....

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : இந்தத் தீர்மானம் கைவிடப்பட்ட பிறகு, அதைப் பற்றிப் பேசுவதற்கு எந்தவிதமான தேவையும் இல்லை. நீங்கள் என்ன சொல்லப் போகிறீர்கள் ? எந்தப் பிரச்சினை மீது ? (குறுக்கீடு) மாண்புமிகு உறுப்பினர் திரு. இளம்வழுதி அவர்கள் எதுவும் என்னிடத்தில் தெரிவிக்கவில்லை. இப்போது நான் உங்களைப் பேச அழைக்கவும் இல்லை. (குறுக்கீடு) நீங்கள் திடீரென்று எழுந்து, ஏதாவது பேசுகிறேன் என்று சொன்னால் இந்த அவையின் மரபுக்கும் மாண்புக்கும் ஏற்றதாக அமையாது. இப்போது ஏறத்தாழ 1¼ மணி நேரம் இந்த அவையிலே மாண்புமிகு காங்கிரஸ் கட்சி உறுப்பினர்களாலே வீணடிக்கப்பட்டிருக்கிறது. (குறுக்கீடு) அதைத் தொடர்ந்து நீங்கள் முயற்சிப்பது நல்லதல்ல. நீங்கள் பேச வேண்டியது ஏதும் இருந்தால் என்னிடத்தில் வந்து சொல்லுங்கள். அனுமதி கொடுக்கப்பட வேண்டிய நிலைமை இருந்தால் நிச்சயமாக அனுமதிக்கிறேன் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. இளம்வழுதி : என்னைப் பேச அனுமதிக்காததைக் கண்டித்து வெளி நடப்புச் செய்கிறேன்.

(திரு. இளம்வழுதி வெளிநடப்புச் செய்தார்.)